1143

KALANILAYAM.

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ஞூ பிப்ரவரி மீ 27உ. [No. 9.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 161
2. அப்பர் (மிருதங்கமும் தாளமும்)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 163
3. கம்பராமாயணம் (மந்திரப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 165
4. மானத சாத்திரம் (நடத்தை)
T. P மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 167
5. ஆச்சரிய சூடாமணி (பர்ணசாலை அங்கம்)
R. முத்தையர் 169
6. இலஞ்சிப் பாவை (இராதாகிருஷ்ணன் சீற்றம்)
T. S. நடராஜபிள்ளை, B. A., B. L 170
7. நம்மாழ்வார் வைபவம் (முதல்பத்து)
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 172
8. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 174
9. வர்த்தமானம் 179

கலா நிலயம்

சுயநலச் சோதனை.

4

ஒருவன் செய்யுங் கருமத்தால் மற்றவர்க்கேனுந் தனக்கேனும் விளையும் பயன் எத்தகையதாயினும், செய்பவன் செய்யுங்கால் நற்செயலே செய்கின்றவனாகின்றான் என்று இயம்புதற் கேற்குமென்பதை முன்னர்ச் செப்பினோம். நமது கட்டுரையின் எல்லையைக் கருத்துட்கொண்டக்கால் இத்துணிவு தர்க்கஇயைபிற்கும் யுக்தியின்தகுதிக்கும் இகவாதிருப்பது புலப்படும்.

நன்மையே யன்றி வேறெதனையும் நாடி எச்செயலும் நிகழ்வதில்லையாதலால், யாவும் நற்செயல்களென்னலாயினவே யல்லாது, அவைகளால் விளைவதும் நன்மையேயா யிருத்தல்வேண்டுமென்ற நியதியில்லை. அன்றியும், பிறனுக்குத் தீமை விளையுமென்று அறிந்து செய்வனவும், மற்றுத் தீமை விளைவிக்கும் கருத்துடனே புரிவனவுங்கூட, செய்பவன் நோக்கத்திற்கிலக்காய்த் தன்நன்மையையே வைக்கின்றனவாதலால், நற்செயல் என்னலாமாறு விளக்கினோம். இவைகளை மனதிற்கொண்டு நன்மைதீமை என்பவைகளின் தன்மையை ஆராய்வோமெனின் சுயநலத்தின் தத்துவம் நன்கு சோதிக்கப்பெற்றதாகும்.

மானுடமனத்தின் நிகழ்ச்சிகளில் எண்ணம் (Thought), இச்சை (Will) என்பன இரண்டு இருக்கின்றன. நினைவோடு செய்கின்ற மானுடச்செய்கை ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் பயனை அடையவேண்டும் என்ற இச்சை, இடைவிட்டகலாது இணங்கிக்கிடக்கின்றது. நடந்தாலும் படித்தாலும் விளையாடினாலும் நிலத்தை உழுதாலும், எது செய்யினும் நம்முடைய கருத்தொன்றை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கம் உடையவர்களா யிருக்கின்றோம். தேகசுகம், மனக்களிப்பு, அறிவு, செல்வம் புகழ் அனையவைகளை எய்தும் நோக்கத்தில் செய்கைகள் தம்முடிவைத்தேடுகின்றன. அம்முடிவை யெய்தியவுடன் அச்செய்கையும் அதன்மேற் செல்வதில்லை. எனினும், தனித்தசெய்கை ஒன்றினால் கணித்தற்குரிய பயன் யாதுங் காணலரிது. பயிர்செய்தல் என்பது ஒரு தொழிலாயினும் அது தனித்ததோர் செய்கை அன்று. வயலிற்குச்செல்ல நடத்தலையே பயிர்த்தொழில்புரிவதன் செய்கைகளில் முதலாகக் கொள்ளினும், அதனின்று உழுது எருவிட்டு நீர்பாய்ச்சிக் கதிர்விளைத்து அறுத்துத் தானியத்தை விலையாக்குகின்றவரையில் எத்தனை ஆயிரக்கணக்கான செய்கைகள் தனித்தனியாகச் செய்யப்படுகின்றன என்பது சொல்லாமலே விளங்கவேண்டியதொன்று. எனின், பயிர்த்தொழில் என்பது பல செய்கைகள் சேர்ந்து ஆகியதோர் தொடர். இத்தொடரிற்குள் சிறுசிறு தொடர்கள் பல இருத்தல் வேண்டும். அவ் வொவ்வோர் சிறுதொடரும் பற்பல தனிச்செய்கைகள் சேர்ந்துதான் ஆகின்றது. பயிர்த்தொழிலில் அடங்கியது உழவு. இதற்கு, ஏர் இருக்கும் இடத்திற்குப்போவது ஒரு செய்கை; மாடுகளை அவிழ்த்துக்கொண்டுவருவது ஒரு செய்கை; மாட்டை ஏரினில் பூட்டுவது ஒரு செய்கை; கழனிக்கு மாட்டை ஓட்டிக்கொண்டு போவது ஒரு

செய்கை; நிலத்தில் கொழுவை ஊன்றுவது ஒன்று; ஊன்றிய ஏரைச் செலுத்தி நிலத்தைப் பண்படுத்துவது ஒன்று— (இவ்வொவ்வொரு செயலுக்குள்ளும் இன்னும் பற்பல செயல்கள் அடங்கியிருக்கின்றனவெனினும், விடயத்தின் தெளிவின்பொருட்டு அவைகளைத் தனித்தனி செய்கைகள்போல் பாவித்துக் கொள்ளலாம்). இவையனைய செய்கைகளின் தொடர்பினால் பயிர்த்தொழிலின் உழவு என்னும் பாகம் முற்றுகின்றது. இனி இவ்விதமே, விதைத்தல் எருவிடல் நீர்பாய்ச்சல், களைகட்டல், அறுத்தல், அடித்தல் சேர்த்தல் முதலிய பல பாகங்களும் தத்தமக்குரிய பலபல செய்கைகள் சேர்ந்து முடிகின்ற வெவ்வேறு தொடர்களாம். இவ்வொவ்வோர் தொடரையும் ஒவ்வோர் வரிசை என்னலாம். பயிர்த்தொழிலின் பயன் தானியத்தை அடைதல். மற்று, அவ்வொவ்வோர் வரிசையும் அந்தப் பயனைக் குறித்தே நிகழ்ந்து முடிகின்றது; ஆதலின் உழுவதன் பயன் யாது என்ற கேள்விக்குத் தானியத்தை அடைதல் என்று விடைகூறலாம்; அவ்வாறே, நீர்பாய்ச்சுவதன் பயனும், களைபிடுங்குவதன் பயனும், அறுத்தலின் பயனும், போரடித்தலின் பயனும், தானியத்தை அடைவதே என்று நாம் கூற இயலும். பயிரென்னுந் தொழிலிற்குள் அடங்கிய ஒவ்வோர் வரிசையின் முடிவாய பயன் இவ்வாறு அத்தொழிலின் முற்றிய பயனோடு அந்தத்தில் ஒன்றேயாயிருக்கின்றதெனினும் இவ்வரிசை ஒவ்வொன்றிற்கும் அண்மிய பயன் வேறுவேறு இருக்கின்றது. உழவுவரிசையின் பயன் நிலம் பண்ணுறுதல், எருவிடல் வரிசையின் பயன் நிலம் செழிப்படைதல், நீர்பாய்ச்சுவதன் பயன் பைங்கூழ் வளர்தல், என இவ்வண்ணம் ஒவ்வொரு வரிசையின் முடிவிலும் அதற்கதற்கேற்ற அண்மியபயன் ஒன்று காணலாம். இவ் வண்மிய பயன்களின் முற்றிய தொகுதி, பயிர்த்தொழிலால் தானியம் அடைவதென்னும் பயனாகும். இதனைச் சேய்மைப்பயன் என்னலாம். இச் சேய்மைப்பயனை நோக்குங்காலையிற்றான் தனித்தனி செய்கைகள் அல்லது செய்கைவரிசைகளின் அண்மைப்பயன் உண்மையில் பயனுடையதாகின்றது. விதைத்து நீர் பாய்ச்சிப் பயிர்வளர்த்துத் தானியம் அடையவேண்டுமென்ற நோக்கம் இல்லாதவிடத்து, உழவுவரிசையின் முடிவாக நிலத்தினைப் பண்படுத்தி நிற்றல் பயனற்றதே யாகும். பின்வரும் வரிசைகளின் தன்மையு மன்னதே.

பயிர்த்தொழிலிற்குரிய இவ்வுண்மை மற்றெத் தொழிற்கும் ஒக்கும். சிலவற்றைக் கற்றுக்கொள்வதற்காக நாம் படிக்கிறோம்—பரிக்ஷையில் தேர்வதற்காகக் கற்கின்றோம்—உத்தியோகம் பெறுவதற்காகப் பரிக்ஷையில் தேர்கின்றோம்—வாழ்நாள் செலுத்துவதற்காக உத்தியோகம் பெறுகின்றோம்—எனத் தனித்தனி வரிசைகளையும், அத்தனித்தனி வரிசைகள் ஒன்றில் தொடங்கி மற்றொன்றில் முடிவதற்கு இடையே உள்ள பல செயல்களையும், அவ்வவ் வரிசைக்குரிய அண்மைப்பயன்களையும், அப்பயன்களினின்று வேறாயிருப்பினும் அவைகளின் தொகுதியினாலேயே அமையவல்ல சேய்மைப்பயனையும், இங்குங்காணலாம். ஆதலின், நமது இச்சைச்செயல்வரிசைக்குத் தொடங்குமிடம் ஒன்று வேண்டுமாதலால் ஒரு வரிசையின் முடிவை மற்றதற்கு முதலாக வைத்துத் தொடங்குகின்றோம். இவைகளை உணர்வதற்குச் சாதாரண அறிவு போதும். இதனில் தத்துவம் ஒன்றுமில்லை, ஊகிக்கவேண்டியது மில்லை. எல்லார்க்கு மெளிதில் புலப்படக்கூடிய தொன்றிது.

ஆனால், இதன்மேல் நாம் ஆராய்ந்து செல்லுங்கால் ஆழஞ் சிறிது அதிகமாகின்றது. பகுத்தறிவும் சாஸ்திரப் பயிற்சியும் இருபுறமும் உடன்வந்து கைதருவதில்லையெனில் கரையேற லருமையாகும். ஏனெனில் இனிவருவன சாதாரண அறிவிற்கு அடங்காதவை; தத்துவ நுண்மையால் நிறுவவேண்டுஞ் சிறப்பின.

ஒவ்வொரு தொழிலின் பயனும், அதனுள் ளடங்கிய பற்பல சிறு வரிசைச்செயல்களின் பயன்களது தொகுதி யாமாறு கண்ட நாம், அத்தொழில் முடிவதோடு பெறற்குரிய பயன் முற்றுகின்றதோ, மற்று அத்தொழிலின் சேய்மைப்பயனோடு முற்றிய செய்கையும் வேறோர் தொழில்வரிசைக்கு முதலாகவேண்டுமென நினைத்தா லாகாதோ வென வினவலாம். வினவவேண்டிய உண்மைகளில் இது மிகவும் முக்கியமானது. விளைத்த பயிரை உண்டும் விற்றும் பல தொழில்கள் புரியப் புகுகின்றோம். வேளாண்மை செய்து செல்வம் ஈட்டுகின்றா னொருவன். வீடுகட்டுகின்றான், மணம் புரிகின்றான், வறியோர்க் கீகின்றான், செல்வத்தா லடையவல்ல செவ்வியை எய்துதற்குரிய பல தொழில்களில் அமர்கின்றான். தானியத்தைக் கொணர்ந்து குதிரில் நிரப்புவதோடு பயிர்த்தொழில் முடிவடைந்துவிட்டது; அத்தொழிலிற்குரிய பயனும் அடைந்தாயிற்று. இனி அதன்மேல், உண்ணுதல் என்னுந்தொழில் ஆரம்பமாகின்றது. அல்லது நெல்லைவிற்றுப் பலவிதங்களில் துய்த்தற்குரிய தொழில்களும் ஆரம்பமாகலாம். எனின், பயிர்த்தொழிலின் முடிவே மற்றதொன்றிற்கு ஆரம்பம் என்பது வெளிப்படை. அது உணவாயின், உணவின் முடிவு வேறெதற்கு முதலோவென வினவுதல் இயற்கையே. இவ்வண்ணம் தொடர்வோமாயின், ஒவ்வொரு தொழிலிற்குள்ளும் பற்றபல வரிசைச்செயல்கள் அடங்கி முடிதல்போலவே, ஒவ்வொரு தொழிலும் வேறொன்றிற்குள் அடங்கிய தனித்தனி வரிசைகளே என்பது புலப்படும். அவ்வேறொன்று என்று உரைத்தது நமது வாழ்க்கையேயாகும். இவ்வாழ்க்கையின் சேய்மைப் பயனிற்கு, ஒவ்வொருதொழிலின் முடிவும் முறையே அண்மைப் பயனெனக் கருதத் தக்கன. தொழிலின் முடிவாய சேய்மைப்பயனைக் கருதாக்கால் அதற்குரிய செயல்வரிசைகளின் அண்மைப்பயன் இன்மையாதல் போலவே, வாழ்க்கையின் முடிவாய சேய்மைப்பயன் சிந்தையில் இல்லையாயின், அதனுள்புரியும் தொழில்களின் அண்மைப்பயன் பயனற்றுப்போகுமெனக் கூறல் வேண்டுமோ. எனின், வாழ்க்கையின் இறுதியாயவோர் பயனை அறியாது நினையாது, பயிரிடலும், உண்டலும், வர்த்தகஞ்செய்தலும், அரசியல்முறைகள் அமைப்பதும் அனைய மானுடப் போக்குவரவுகளில் கலக்கின்ற மதியானது, விதைத்துப் பயிரிடவேண்டுமென்ற எண்ணமோ இல்லாது உழுவதே கருமமென உழைக்கின்ற மதியையே ஒக்கும்.

ஆனால், இதன்மேல் இனியொன்றுமில்லை எனத்தக்க முடிவாய பயன் ஒன்றுளதோ என்பது மிக மிகப் பழையதோர் கேள்வியாய் இவ்வுலகில் நிலைத்திருக்கின்றது. இவ்வரிசைக்கு ஈறாயது, அவ்வரிசைக்கு ஈறாயது என்னாமல், எல்லாவரிசைகளாலும் உய்க்கப்பெறுகின்ற தொழில்கள் அனைத்திற்கும் ஈறாய் நின்று, "இதுவே முற்றிய பயன், இதற்கயல் பிறிதொன்றில்லை, இதனால் எய்துவதற்கியலலாவது ஒன்று இல்லா வெல்லையைச் சேர்ந்துவிட்டாய்" என்று எவ்வகைநாடி எதனைக் குறித்து உரைசெய்வோம்? இக்கேள்வி, கடவுளைக் குறிக்கொள்ளும் பற்பல சமயங்களின் கொள்கைகளுக்கு ஏற்றவாறுவிடை பெற்று விளங்கும். ஆயினும், சமயநெறியைத்தழுவி இதனை ஆராய இவ்வேளை நினைத்திலம். கடவுள் தன்னுடைய சிருஷ்டியினிடமிருந்து வேண்டுவது யாது என்பதை ஈண்டு நாம் ஆராய்வதின்றி, சிருஷ்டியினிடமிருந்து நமது இச்சை, முடிவாக வேண்டுவது ஒன்றுண்டோ, உண்டாயின் அது யாவதாயிருத்தல் கூடும் என்பதையே சோதிக்க முயல்கின்றோம்.

செய்கையும், செய்கைகளா லாகிய தொடரும், தொடர்களாலாகிய தொழிலும், அதனதற் கமைந்த பயனையெய்தியவுடன் மேற்செல்லாது முடிவடைகின்றன என்பதை முன்னர்க் கூறினோம். இதற்குக் காரணம் அச் செயல்முதலியவைகளைத் தூண்டிய இச்சை நிறைந்து முடிவதேயாகும். இப்பயன்களெல்லாம் இச்சையின் ஒவ்வோர் பாகத்தை ஒவ்வோரளவு அவ்வவ்வேளை நிறைக்கின்றனவேயன்றி அதன் முழுமையையும் நிலைத்தபடி பூர்த்திசெய்வதில்லை. ஆதலாற்றான் மேன்மேலும் தொழில்கள் புரிவதிலும், ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றித் திரிவதிலும் சுழல்கின்றனர் மாந்தர். எனின், இச்சையில் இதன்மேல் இடமில்லை என்னும்படி அதனை நிறைக்கக்கூடிய பயனைக்கண்டு அடைவோமாயின், அதற்கப்புறம் இச்சையானது முற்றிய அமைதியை அடைந்ததாகும். அத்தகைய பயன், இதற்குரியது அதற்குரியது என்று தனித்தனி பெயரும் தன்மையும் பெறாது, மானுட இச்சைகளின் முழுத்தொகுதிக்கும் மறுமொழி தரக்கூடியதாயிருத்தல் வேண்டும். இன்னதோர் பயன் என்ன தன்மைத்து என்று தேர்ந்துரைக்கவேண்டிய கடமை மானதசாத்திரத்தைச் சார்ந்தது. அதனைச்சிறிது பின்பற்றி வினவுங்கால் வருகின்ற விடையைப் பின்னர்க் கூறுவோம்.

அப்பர்

8. அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்

[144-வது பக்கத் தொடர்ச்சி]

4. மிருதங்கமும் தாளமும்

(i) மிருதங்க வகுப்புக் கருவிகள்.

இவ்விரண்டு கலைகளும் ஒன்றிற்கொன்று மிக்க சம்பந்த முடையனவாதலால், அவை ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டன. மிருதங்கமென்பது உத்தமத்தோற் கருவியி லொன்று.

" மத்தளம் தண்ணுமை யிடக்கை சல்லிகை
வைத்த நான்கு முத்தமக் கருவி" என்பர்.

" முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன
பணிலம் வெண்குடை
யரசெழுந்ததோர் படியெழுந்தன வகலுண்
மங்கல வணியெழுந்தது"

சிலப்பதிகாரம்-மங்கலவாழ்த்துப்பாடல்.

முருடு என்பது, மத்தளம் அல்லது மிருதங்கம். இது, அதிர்ச்சிதரும் தோற்கருவியாம். மத்தளம் என்னும் பெயரைத் தண்ணுமைக்கும் சிலர் கூறுவார். மத்து என்பது ஓசைப்பெயர். இசையிடனாகிய கருவிகளுக்கெல்லாம் தளமாதலான் மத்தளமென்று பெயராயிற்று. மிருதங்கமென்னும் பெயர் தமிழ்ப் புராதன நூற்களிற் காணப்படவில்லை. ஆயினும் எழுவகை முதற்கருவியில் இதுவே முதலென நாம் கொள்ளல் வேண்டும். இன்றேல் கலைகளில் ஒன்றாய் நம் முன்னோர் இதனை எடுத்திரார். இதை மதங்கமென்றும் சிலர் கூறுவர்.

தரித்த மதங்கமொடு மத்தளஞ் சல்லி
பெருத்த காடிகையே பேரி—யுரத்த
படகம் குடமுழவம் பாங்காய வேழும்
அடைவே முதற்கருவி யாம்.

சத்தானந்தப் பிரகாசம்.

மதங்க மென்பதே மிருதங்கமென மருவியிருக்கலாம். ஆகையால், பூர்வத்தில் இக்கருவி இந்நாமமே பெற்றதென வற்புறுத்துவதற்கு நமக்குப் போதுமான ஆதரவுகளில்லை. ஆயினும் மிருதங்கமென்பது உத்தமத் தோற்கருவி யென்றும், அது இசைக்குத் துணையாய் இசையோன் முதலானோர் வக்கரிப்பதைச் சீர்திருத்த ஏற்பட்டதென்றும், தாளத்திற்கும் இது தக்க கருவியென்றும் நாம் கொள்ளலாகும். ஆயினும் இதை, வீணை குழல் இவற்றைப்போல் தனிக் கருவியாய் இசைக்கப் பயன்படுத்தலாகாது. மிடற்றுக் கருவியேனும் முதலிசைக் கருவியாயின், இது துணைக் கருவியாய்ப் பயன்படும்.

மிருதங்கமென்னும் கருவி தேவதுந்துமி யென்றும் துந்துமி என்றும் கூறப்படும்.

விட்டி சைப்பன கொக்க ரைகொடு
கொட்டிதத் தளகம்
கோட்டிப் பாடுமித் துந்துமி யொடுகுட
முழாநீர் மகிழ்வீர்
மொட்ட லர்ந்து மணங்கமழ் முருகன்
பூண்டி மாநகர்வாய்
இட்ட பிச்சை கொண் டுண்ப தாகினீ
ரெத்துக்கிங்கிருந் தீ ரெம்பிரானிரே.

சுந்தரர்.

காலையொடு துந்துபிகள் சங்குகுழல்
யாழ்முழவு காமருவுசீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்க
ளேத்திமகிழ் மாகறலுளான்
தோலையுடை பேணியதன் மேலொர்சுடர்
நாகமசை யாவழகிதாப்
பாலையன நீறுபுனை வானடியை
யேத்தவினை பறையுமுடனே.

சம்பந்தர்.

இவ் விசைக்கருவி கொட்டுவதும், மலைச்சாரலினின்று அருவித்திரள்கள் பாயுங்கால் சில பொந்தைகளில் நீர் வெளிவரும் சப்தமும் ஒன்றாயிருப்பது, மழைவிட்ட பிறகு மலைமேற் செல்வோர் அநுபவிக்கும் இன்பங்களில் ஒன்றென்பது யாவரும் அறிந்ததே.

"தந்தத் திந்தத் தடமென்றரு வித்திரள் பாய்ந்துபோய்ச்
சிந்த வெந்தகதி ரோனொடு மாசறு திங்களார்
அந்த மில்லவள வில்ல வனேகதங் காவதம்
எந்தை வெந்தபொடி நீறணி வார்க்கிட மாவதே"

எனச் சம்பந்தர் பாடியதும் காண்க. இதனையே "விழவொலியும் விண்ணொலியு மானான் றன்னை"*என்பதில் அப்பரும் எண்ணினார் போலும். இக்கருவி தேவாரத்தில் வரும் சந்தர்ப்பங்கள் மூவகையாம். இம்மூவகையும் நம்பியாரூரர் தமது திருவெஞ்சமாக்கூடல் திருப்பதிகத்தில் 4, 6, 8-ம் பாசுரங்களிற் குறித்துக் காட்டினர். ஆயினும் இதை முழவென்னும் பொதுப்பெயராலே கூறுகின்றார். இச் செய்யுட்களில், இக்கருவியின் பொருத்தங் காண்க:—

"பண்ணேர்மொழியாளை யோர்பங்குடையாய்
படுகாட்டகத்தொன்று மோர்பற்றொழியாய்
தண்ணார்அகிலும் நலசாமரையு
மலைதெற்றுசிற்று றதன்கீழ்க்கரைமேல்
மண்ணார்முழவுங் குழலுமியம்ப
மடவார்நடமாடு மணியரங்கில்
விண்ணார்மதிதோய் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா வடியேனையும் வேண்டுதியே?" (4)

"தொழுவார்க்கெளியாய் துயர்தீரநின்றாய்!
சுரும்பார்மலர்க்கொன்றை துன்றுஞ்சடையாய்!
உழுவார்க்கரிய விடையேறியொன்னார்
புரந்தீயெழவோ டுவித்தாயழகார்
முழவாரொலி பாடலொடாடலறா
முதுகாடரங்கா நடமாடவல்லாய்
விழவார்மறுகில் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா வடியேனையும் வேண்டுதியே?" (6)

"காடும்மலையுந் நாடும்மிடறிக்
கதிர்மாமணிசந் தனமும்மகிலும்
சேடன்னுறையும் மிடந்தான்விரும்பித்
திளைத்தெற்றுசிற்று றதன்கீழ்க்கரைமேல்
பாடன்முழவுங் குழலுமியம்பப்
பணைத்தோளியர் பாடலோடாடலறா
வேடர்விரும்பும் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா வடியேனையும் வேண்டுதியே?" (8)

—சுந்தரர்.

எனவே, பொதுமகளிர் குழல் முதலியனவோடு ஆடும் நாடகசாலை ஒன்று, பரமன் நடிக்கும் பாரதியரங்கு (சுடலை) மற்றொன்று; ஆடவர்கள் தங்கள் தொழில்முடித்து இல்லத்திற்குத் திரும்பியபின்னர்த் தமக்குரிய மகளிருடன் பாடும் சந்தர்ப்பம் பின்னுமொன்று, ஆக இம் மூவிடங்களையே இவ்விசைத் துணைக்கருவி பயன்படும் தலங்களாய்த் தேவாரத்திற் காணலாம். பாரதியரங்கில் நடிப்பது யாவருக்கும் காணக் கூடியதன்றாகலின், திருக்கோயிலில் இம் முழவை அதற்குப் பதிலாய்க் காணலாகும்:—

எந்தம் மடிக ளிமையோர் பெருமா
னெனக்கென்று மளிக்கு மணிமிடற்றன்
அந்தண் கடலங் கரைமேன் மகோதை
யணியார் பொழிலஞ்சைக் களத்தப்பனை
மந்தம் முழவுங் குழலு மியம்பும்
வளர்நாவலர் கோன்நம்பி யூரன் சொன்ன
சந்தம் மிகுதண் டமிழ்மா லைகள்கொண்
டடிவீழ வல்லார் தடுமா றிலரே.

சுந்தரர்.

கத்திரிகை துத்திரி கறங்குதுடி
தக்கையோ டிடக்கை படகம்
எத்தனை யுலப்பில்கரு வித்திரள
லம்பவிமை யோர்கள் பரச
ஒத்தற மிதித்துநட மிட்டவொரு
வர்க்கிடம தென்ப ருலகில்
மெய்த்தகைய பத்தரொடு சித்தர்கண்
மிடைந்துகளும் வேதவனமே.

சம்பந்தர்.

அறையார் கழலன் னழலன் னியலின்
பறையாழ் முழவும் மறைபா டநடம்
குறையா வழகன் குடவா யிறனில்
நிறையார் பெருங்கோ யினிலா யவனே.

சம்பந்தர்.

ஒரு நகரத்தின் குடிவளம் காட்டுவதற்கு வீதிகளில் முழவம் முரலல் அத்தாட்சியாகும். இது புகலியர் கோன் திருவாக்கில் நன்றாய்க் காணலாம்:—

பாடன் முழவும் விழவு மோவாப்
பன்மறை யோரவர் தாம்பரவ
மாடநெ டுங்கொடி விண்டடவு
மருகனிலாவிய மைந்த சொல்லாய்
சேடக மாமலர்ச் சோலை சூழ்ந்த
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
காடக மேயிட மாக வாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

சம்பந்தர்.

நிறையுடை நெஞ்சுளும் நீருளும் பூவுளும்
பறையுடை முழவுளும் பலியுளும் பாட்டுளும்
கறையுடை மிடற்றண்ணல் கருதிய கானப்பேர்
குறையுடை யவர்க்கலாற் களைகிலார் குற்றமே.

ஷை.

மண்ணார் முழவதிர மாடவீதி
வயற்காழி ஞானசம் பந்தனல்ல
பெண்ணா கடத்துபெருங் கோயில்சேர்
பிறையுரிஞ்சுந் தூங்கானை மாடமேயான்
கண்ணார் கழல்பரவு பாடல்பத்துங்
கருத்துணரக் கற்றாருங்கேட்டாரும்போய்
விண்ணோ ருலகத்து மேவி வாழும்
விதியதுவே யாகும் வினையு மாமே.

ஷை.

இத்தகைய குடிவளமே அந்நகர்களின் நாடகசாலையின் மாட்சிமையுங் காட்டும் "முழவோ டிசையின்" காரணமாம்:—

தழல்சேர்தரு திருமேனியர் சசிசேர்சடை முடியர்
மழமால்விடை மிகவேறிய மறையோனுறை கோயில்
விழவோடொலி மிகுமங்கையர் தகுமாடக சாலை
முழவோடிசை நடமுன்செயுமுதுகுன்றடை வோமே

சம்பந்தர்.

* புகழொளியைப் புரமெரித்த புனிதன் றன்னைப்
பொன்பொதிந்த மேனியனைப் புராணன் றன்னை
விழவொலியும் விண்ணொலியு மானான் றன்னை
வெண்காடு மேவிய விகிர்தன் றன்னைக்
கழலொலியுங் கைவளையு மார்ப்ப வார்ப்பக்
கடைதோறு மிடுபிச்சைக் கென்று செல்லும்
திகழொளியைத் திருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையே னறியாதே திகைத்த வாறே.

திருமுதுகுன்றம்-திருத்தாண்டகம். 6.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்.

1. மந்திரப் படலம்.

நல்லோ ரல்லால் வல்லவ ரில்லை.

154வது பக்கத் தொடர்ச்சி.

அரசனும் மந்திரிகளும்சேர்ந் தரசுநடத்தலென்னும் ஓரேகருமத்தைச் செய்கின்றவர்களாதலால் ஒருவர்க் குரியதெனக் கூறப்படும் குணமும் செயலும், மணக்குடவர் ஓரிடத்தில் குறித்தபடி, மற்றவர்க்கும் ஒக்கும். ஆதலின், ஒற்றரால் இரகசியம் அறியவேண்டுதல், காரிய முடியுங்காறும் கபடமாயிருத்தல், சந்தி விக்கிரகம் முதலிய தந்திரங்களை மேற்கொள்ளல் அனைய கருமங்களை அரசன்செய்யினும் அவை அரசின் செயலே, அமைச்சர் செய்யினும் அரசின் செயலே. அமைச்சர்தம் தொழிலோடு அவர் குணங்களும் அரசியலைச் சேர்கின்றன.

இம்மந்திரப் படலத்தில், மந்திரியி னிலக்கணங் கூறிநிற்கின்ற ஆறு செய்யுள்களையும், முன் வான்மீகத்திலிருந்தும்திருக்குறளிலிருந்தும் பெயர்த்திங்கு எழுதியுள்ள பாகங்களையும் ஒப்புநோக்கினால், மந்திரிகள்தம் தொழிலில் மாசற்ற பாகங்களையும், அவர் குணங்களில் முதலறத்திற்கு முரண்படாப்பகுதிகளையும் மாத்திரம் கம்பர் தன் மதியினால் ஏற்றுக்கொண்டு மற்றவைகளை விட்டிருப்பது தெரியவரும். வான்மீகி முனிவரது வார்த்தைகள் கம்பரது மனத்தில் தங்கியியங்கின என்பதற் கையமில்லை. "அறுபதினாயிரரென்னு மாண்டகைக்கு உறிதியி லொன்றிவர்க்குணர் வென்றுன்னலாம்" என்ற வாசகம், "இத்தகைய நல்ல மந்திரிகள் ஒரே மனமுள்ளவர்களாய் இராஜ காரியத்தை வகித்து வந்ததனால்........" என்று தொடரும் வடமொழியின் நேரெதிரொலியாம். "வெகுமானிகள்" என்று வான்மீகி உரைத்ததற்கிணங்க, "மானம் நோக்கில் கவரிமா அனைய நீரார்" அமைச்சர் ஆகுமாறு,கம்பர் திருக்குறளின் ஒழிபியலிலுள்ள குறளைப் பெயர்த்துத் தன் அமைச்சியலில் சேர்த்துக்கொண்டார். வள்ளுவர் தன் அறுபத்துநான்கா மதிகாரத்தில் அமைச்சினது பொதுவிலக்கணம் கூறுமிடத்திலேனும், அதன்பின் சிறப்பிலக்கணங் கூறவந்த சில அதிகாரங்களிலேனும் மானமுடைமை அமைச்சருக்கின்றியமையாததெனப் பேசாதிருக்கக் கம்பர் அதனை மறவாது சேர்த்துக்கொண்டது வான்மீகியின் நினைவு பற்றியேயென் றெண்ணல் வேண்டும். கவரிமாவின் உவமையை நோக்கின் குறளின் அமைப்புக் கம்பர் மனத்தி லிருந்ததென்பதும் வெளிப்படை. ஆதலின் அவ்விரு நூல்களினின்று கம்பர் ஆங்காங்கு மாறியிருப்பது காகதாலிய மன்று. அமைச்சருக் குரிய, குலம் கல்வி கேள்வி சீலம் நுண்ணறிவு செல்வமுடைமை முதலியவைகளைத் தன் முன்னிரு நூல்களிலிருந்தும் கம்பர் கருத்துடன் கொண்டனர். சொல்வன்மை, ஆள்வினையுடைமை, புகழ்க்கு வேண்டியன செய்தல் அனையவைகளும் முதலறத்திற் கிணங்கியவைகளாதலின் கம்பரால் விலக்கப்பெற்றில.

மற்றுச் சார்பற மெனத்தகுந்த தந்திரமொன்றிற்கும், தயாதனுக்குக் கம்பரே தேர்ந்தமைத்த மந்திரிகள் சிறிதும் முகங்கொடுத்திலர். ஒற்றருடைய ஊடாட்டம் கோசலநாடு பெற்றிராமையை அரசியற் படலத்திலேயே கண்டோம். இவ்விடத்திலும், வள்ளுவர்க்கும் வான்மீக முனிவற்கும் எதிராகச் சிறிதும் ஒற்றரது உதவியை நாடாத அமைச்சரையே கம்பர் நிறுவினார். ஒற்றுடவேண்டியதற்கு ஆதாரமாயிருக்கின்ற மனப்பான்மை அவநம்பிக்கையே மைந்தன் முதல் மந்திரியீறாக யாவரையும் உள்வரிக் கோலங்கொண்ட ஒற்றருடைய பார்வைக்கு ஆளாக்கிவைக்க வேண்டுமென்று வீடுமன் வற்புறுத்தியதை வள்ளுவரும் வான்மீகியும் ஏற்றுக்கொண்டனர். உண்மையில், ஒற்றரையும் ஒற்றரால் ஒற்றிக்கொள் வேண்டுமென்று வள்ளுவர் உரைத்திருப்பதே இவ் வவநம்பிக்கையால் பிறந்த தந்திரத்தின் எல்லை என்னலாம். தன்னையே நம்பாதவன்தான் மற்றவரை நம்பமாட்டான்; மற்று அறத்தை நம்பாதவன்தான் தன்னை நம்பமாட்டான். எனின், அறத்தில் முழுநம்பிக்கை இல்லாமையையே ஒற்றுடல் காட்டித்தரும். ஆதலின் ஒற்றர் ஒழிந்தனர்.

வான்மீகிமுனிவர் தன்னுடைய தயாதனது மந்திரிகளுக்குக் கொடுத்துப் பாராட்டியிருக்கின்ற ஆற்றல்களில்ஒற்றுடலன்றி இன்னுமொன்றுளது. சந்தி விக்கிரகம் என்னுமித் தாழ்ந்த தந்திரம் அரசுபுரிதற் கின்றியமையாததென அவ்வமைச்சர் எண்ணினர். குறளும், 'பிரித்தலும் பேணிக்கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்லது அமைச்சு' எனக்கூறும். 'ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோ ரொற்றினால் ஒற்றிக்கொளல்' கற்பித்த வள்ளுவர், இச்சந்தி விக்ரக வகையிலும், "நட்டார்க்கு நல்லசெயலின் விரைந்ததே, ஒட்டாரை ஒட்டிக்கொளல்" என்று தன்னேரில்லாத் திறமையோடு சொற்களையாத்தனர். இத் தந்திரத்தின் வன்மையை உரைத்தற் கிவைகளை வெல்லுஞ்சொற்கள் வேறு இல. முன்னரே நண்பராயிருப்பவர்க்கு நல்லசெயவிரைதல் வீணாதலால், பகைவர்க்குப் பகையா யிருப்பவரைத் தாம் நட்புக்கொள்ள விரைவதே பயனுடைய வினைசெயல்வகை என்னுங்கால் நட்பென்னுமத் திப்பியச்சொல்லின் தூய்மை நிலைகுலைந்து நடுங்குகின்றது.பரிமேலழகர் உரையிது; உரையளவிற் குறையுமில்லை. ஆயினும் வள்ளுவரது வாயில், பொருட்பாலினுங்கூட, இந்தச் சொற்களை வைப்பதற் காற்றாத மணக்குடவர், "தம் சுற்றத்திற்கு நல்லவைசெய்தலினும், பகைவரைப் பொருந்தி நட்பாகக் கொள்ளுதலை விரைந்து செய்யவேண்டும்" என்று பொருள்கண்டார். பகைவன் வலியைச் சிதைக்கும்வண்ணம் அவனது பகைவனைத் தந்திரமாய்த் தான் நட்புச் செய்துகொள்வதனினும் தன்னுடைய பகைவனையே நண்பனாக்கொள்ளும் பெருந்தன்மை இப்பொருளில் பயக்கின்றது. இவ்வாறுதான் உரைகாணும் நூலின் பெருமையை மணக்குடவர் காக்க முயன்றவிடம் இது ஒன்றேயன்று. "தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச் சொல்லலும் வல்ல தமைச்சு" என்ற குறளிற்குப் பரிமேலழகர், "ஒரு

காரியச் செய்கை பலவாற்றல் தோன்றின் அவற்றுள் ஆவது ஆராய்ந்தறிதலும், அது செய்யுங்கால் வாய்க்குந் திறல்நாடிச் செய்தலும், சிலரைப் பிரித்தல் பொருத்தல் செய்யற்கண், அவருக்கு இதுவே செய்யற்பாலதென்று துணிவு பிறக்கும்வகை சொல்லுதலும் வல்லவனே அமைச்சனாவான்'' என்று உரை கூறியதில், சொல்வன்மை யுடைமையெல்லாம், பொய்மெய் என்பது பாராமல் தங்கருமம் கைகூடவேண்டி ஒருதலையாய்க் கூறுதற்கே எனல் ஒக்குமோ என்று எழற்குரிய ஐயத்திற்கு அஞ்சிய மணக்குடவர், "ஒரு வினையைநன்றாகஆராய்தலும், அதனைச்செய்ய நினைத்தால் முடியுமா எண்ணிச்செய்தலும், ஐயமாகிய வினையைத் துணிந்து சொல்லுவதும் வல்லவன் அமைச்சனாவான்'' என்று ஒருவாறு அதன் வன்மையைக் காத்துத் தணித்தனர். ஆயினும் என்! நூலின் கருத்து நிலைத்திருக்க, இரண்டொரு குறளின் உரையால் மாற்றுதற்கு மணக்குடவராற்றான் ஆகுமோ. "பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்லதமைச்சு'' என்றபின், யாரால் என்ன செய்ய இயலும்! சந்தியிலும் விக்ரகத்திலும் வல்லவனே அமைச்சன், என்ற பொருளையே பரிமேலழகரோடு மணக்குடவரும் எடுத்துக் கொள்ளாமல் தீரவில்லை. இக்கருமத்திற்கு வஞ்சனை என்பதன்றி வேறு பெயர் கூறுவதெல்லாம் பொய். வஞ்சனையின்றி வாழ்க்கையில்லையாயின், முதலறப் பெருமையில் முழுகிய மேலோர் அவ்வாழ்க்கை வேண்டாவென வெறுப்பரல்லால் கைதவத்திற்கு முகங்கொடுத்து, 'தர்மம் அதர்மம் இரண்டுந்தா'னிருக்குமென அமைதியோ வடையமாட்டார். அறமல சில செய்து அறத்தினைக் காத்தலென்பது அழியாமுரணுடை அவலச் செய்தி எனக் கலைதெரிபுலவரிக் கம்பர் கருதினர். ஆதலின் பிரித்தல் பேணல் பொருத்தல் அனைய புணர்ப்பினால் ஆற்றல் நிலையா நல்லோரே வல்லாரெனக் கம்பர் ஒரு தனி முதலறத்தின் மேன்மையயே நோக்கி, அறத்தின் மூர்த்தி வந்தினிது தன்வயி னவதரிக்குந் தூய்மை வாய்ந்த தயரதற்கு அமைச்சர்க ளமர்த்தினர்.

இன்னவாறு, கல்வி குலம் சீலம் புகழ் முதலியவைகளை மந்திரிக்குரியவாய் முன்னைய நூல்களிலிருந்து ஏற்றுக்கொண்டார் கம்பர்; மானத்தைச் சேர்த்துக் கொண்டார்; ஒற்றுடல் சந்தி விக்கிரக மனைய சூழ்ச்சிகளின் சிறுமையை விலக்கிவிட்டார். மற்று, ஏற்றுக்கொண்டிருப்பவைகளாய கல்விகேள்விகளும் முன்னூல்களிலிருந்து இடம்பெயர்ந்து மட்டுமே கம்பரது செய்யுளிற் சேர்ந்திருக்கின்றன என்றெண்ணலாகாது. அரசுநடத்துவோர் தம் தந்திரங்களைப் பிழையாமற் பயில்வதற்கே உதவியாய்க் கல்வியு முதல் நூல்களிற் கொள்ளப்பெற்று நிற்கின்றது. தயரதன் அரசியலில் சூழ்வினை முடிப்பதற்கோ ருபாயமாய்க் கல்விகேள்விகள் வாய்க்கப்பெற்றில. இவ்வமைச்சர், "கலையின் குப்பையும் பலமுதற் கேள்வியும்'' மாத்திரமல்லாமல் அதன் பயனும் எய்தினவர். அப்பயனே வாலறிவன் நற்றாள் தொழுவதே என்று உணர்த்துதற்கு வள்ளுவரே துணை. ஆதலின், இவர் சார்பறச் சோதனையில் சிக்காது தெய்வத்தையே நோக்கி நிற்பவர் ஆகின்றனர். அன்னார், சிறிது பாபம் இருக்கத்தான் இருக்கவேண்டியதோர் முறையிற் பயில இயைவாரோ. எனவே, அறமுதல் நலியினும் தம்மரசின் நன்மையையே நோக்குதலில் தலைநிற்கும் ஏனைய அமைச்சர்களைப் போலாது, அந்நலமேமுதல் நலியினும் நடுவே நோக்குவாராயினர். ஆகவே, அரசினைத் தாங்குதலே தங் கருமமெனுங் குன்றிய நோக்கிற் சிறக்காது, தருமந் தாங்குங் கருமத்தில் தயரதனுக்குஅண்மிப் பொலிந்தனர். 'அரசு தாங்கினர்' என்னாதுகம்பர் 'அருந் தருமந்தாங்கினர்' என்றது ஆழ்ந்த கருத்தால் அமைத்த மாற்றமாம். அரசினைத் தாங்குவதே நினைவுங் கருமமு மாயின், சலம் சிறிதேனும் இருந்தே தீரவேண்டுமென்று வீடுமன் ஒவ்விய தந்திர தருமத்தில் பிழையில்லை. இவ்வமைச்சரோ, தாங்குவது தருமமே யாதலால், சலமுதலறுத்த திவர்க்கு இயற்கையாயிற்று.

காலமும் இடனும் ஏற்றகருவியும் கருமமும் தெரிந்துசெய்வது அமைச்சின்திறம் என்றனர் நாயனார் முதல் முன்னையோர். முன், கல்வி கேள்விகளால் வினைகளாற்றினர் என்னாது பயனை எய்தினர் என்றது போலவே, காலமிடங் கருவிகளைக் கொண்டு அருவினை மாண்டனர் என்னற்குக் கம்பர் இணங்கவில்லை. இவைகளைத் தெரிந்து தம் கல்வியின் பயனாகிய தெய்வத்தின் திருவுளக் கருத்துணர்ந்தவராதலின், அறத்தினையே பெருக்கினர் இவ்வமைச்சர். கருமத்தை நுனித்துக் கால இட கருவிகளால் செய்யவேண்டுமென்றனர் வள்ளுவர்.கம்பரோ தெய்வத்தைநுனித்து அறத்தைப் பெருக்கவேண்டுமென்றனர். பகையை வேருடனறுத்து அரசு தாங்குவதற்கு எதிராகச் சலத்தை அறுத்துத் தருமத்தைத் தாங்கும் பெருமைக் கிணங்க அறஞ்செய்யும் மேன்மை இங்கு எய்தியது.

தம் சூழ்ச்சிகள் கைவர முயல்வதில் அமைச்சர்க்கு வன்கண் வேண்டுமென்றார் வள்ளுவர். அறத்தினில் உறுதியின்றித் தம் கருமத்தையேபற்றிநிற்றல் அச்சமுடையதோர் நிலையாம். ஆதலின், இதனில் அஞ்சாமை உடையதென்னல் முரண்பட மொழிவதொன்று. எனவே, தயரதன் மந்திரிமார் அஞ்சாமையுடையராய் அசைவின்றி யிருத்தல் அறத்தை அயிர்த்துத் தம் சூழ்வினையை ஆற்றலிலன்று. நீதியை விடாதுரைத்தலில் இவர் வீரராயினர். இதனிலும் பெரிய வீரம் ஈண்டிலது. இன்னவர் தாளாண்மையும் ஆள்வினையுடைமையும் தாம் சூழ்ந்த கருமங்களைத் தொடுத்துமுடித்தலில் செல்லுமோ! அரசியலிற் சிறிது அதர்மம் சேரத்தான்வேண்டும் என்ற கொள்கையைக் கம்பர், "செம்மையில் திறம்பல் செல்லாத் தேற்றத்தார்'' என்ற சொற்களால் கடிந்தகற்றினர். "செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல்'' என்றனர் வள்ளுவர். தந்திரங்களைக்கொண்டு செய்கை சில சாதிக்க வேண்டுமென்ற சூழ்ச்சியோர்க்கே, அவ்வப்போது மாறுகின்ற உலகத்தின் இயற்கைக்கு ஒக்கத் தம் முறைகளை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஒருதலையாச் சொல்லவேண்டியதும் இன்னவர்க்கே உரியதாகின்றது. முதலறத்தில் முன்னிய சிந்தையோர்க்கு இவையாவும் மிகை. பின், தயரதன் தொல்லமைச்சர், "மும்மையும் உணரவல்லா'' ராயினும், "ஒருமையே மொழியும் நீரார்'' ஆவதன்றி அவர்க்கு வேறோர் நீர்மையில்லை.

வீடுமன் வான்மீகர் வள்ளுவர் யாவரும் கருதியுமறியாவோர் உயர்வு தயரதனது மந்திரிகள், "வினையின் வந்ததாயினும் மாற்றலாற்றும் பெற்றிய''ராவதில்

பெறுகின்றனர் கல்வியின் பயனை எய்தி, தெய்வம் நுனித்து, அறங்குணித்துச் செம்மையில் திறம்பல் செல்லாத் தேற்றத்தாராய், நீதிவழுவா வீரநிலையில் நின்று ஒருமையேமொழிந்து, சலமுதலறுத்து அருந் தருமந் தாங்குவார் இச்சால்புடை அமைச்சின் மேன்மையோரே யாதலின் ஊழையும் உப்பக்கம்காணவல்ல உயர்வினை இவர் கம்பர் பெருமானால் அளிக்கப்பெற்றனர். மற்றுத் தங் கல்வி குலம் செல்வம் நுண்மதி அனைய நலங்களை யெல்லாம் இராஜ்யதந்திரத்தில் (King craft) செலுத்த நினைத்த மந்திரிகளுக்கு இப்பெருமையை நல்க அன்னவரைப் பாராட்டும் வீடுமன் வள்ளுவர் வான்மீகி முதலாயினோரே துணிந்திலர். இத்தகைய மந்திரிகளுக்குத் தொல்நல்வினையென உதவுஞ் சூழ்ச்சியல்லால் வேறு சூழ்ச்சியில்லை.

மானத சாத்திரம்

189093

[PSYCHOLOGY]

நடத்தை (Behaviour)

147-வதுபக்கத் தொடர்ச்சி.

உள்ளத்தினை ஆராயும்பொழுது அதன் அமைப்பினையும் (Structure) அதன் செயலினையும் (Function) வேறு பிரித்து அறிதல் வேண்டும். ஒன்றை மற்றொன்றாக எண்ணி மயங்குதல் ஒண்ணாது. இயற்கைச்செயல்கள் இவ்வகையில் உள்ளத்தின் செயல்கள் ஆகும். இச்செயல்களை எழுப்பிநிற்கும் மனஅமைப்புக்களை மனநிலைகள் (Dispositions)என வேறுபிரித்து வழங்கவேண்டும். இயற்கைச்செயலை எழுப்பும் மனநிலையை இயற்கைச் செயனிலை என்றோம். இயற்கைச்செயனிலை என்றும் இயற்கைச் செயல் என்றும் வேறு பிரிப்பது வேலையற்ற வேலை எனச் சிலர் எண்ணலாம். இயங்குநிலைக் கேற்றதொரு நின்றநிலை ஈதென்ன வேறாகக்கொள்வதால் நாம் புதிதாக அறிவதுதான் என்ன? ஓர் ஆண்மகன் செயல்களை ஆண்மகன் என்ற எண்ணத்தோடு தொடர்பு படுத்தி உணர்தல்போல, செயலையும் மனநிலையோடு தொடர்புபடுத்தி உணர்தல் வேண்டும். அல்லாக்கால் இயற்கைச் செயல்களின் ஒற்றுமை நயத்தை அறியாது இடர்ப்படுவோம்.

ஓர் இயற்கைச்செயனிலை இயங்கும்போது அதனிலிருந்தும் பிறக்கக்கூடிய இயற்கைச்செயல்கள் அனைத்தும் வெளியாவதில்லை. அஞ்சியோடும் சமயத்தில் சிலபொழுது கால் நடுநடுங்குவதால் ஓடமுடியாமற் போகின்றது; சிலபொழுது ஓட்டம் மிகுதிப்படுகின்றது. அவ்வவ்விடத்திற்குத் தக்கவாறு சிற்சில செயல்களே வெளியாகின்றன. ஆதலால் யாதானும் ஓரிடத்தில் கண்ட செயல்களை ஆராய்ந்து கூறினால் குன்றக் கூறல் எனும் குற்றத்திற் காளாவோம். ஓர் உயிருளியின் இயற்கைச்செயனிலையை அறியவேண்டுமாயின் அதன் இயற்கைச்செயல்களைப் பலமுறையும் கண்டறிதல் வேண்டும். சில உயிருளிகளுக்குச் சில இயற்கைச்செயல்கள் வெளிப்படுவதற்கு இட மேற்படாமலேபோகலாம். உண்டு மிகுந்த உணவைப் புதைத்து வைக்கும் இயற்கை நாய்களுக்கு உண்டு.வீட்டில் வளரும் நாய்கள் இவ்வாறு செய்வதற்கு இடமுண்டோ? ஆகவே யாதானும் ஒருநாயைக் கண்டறிந்தபின் இயற்கைச்செயனிலையை அறிந்ததாகஎவரேனும் வெளிவர முடியுமோ? அவ் வினத்தைச்சேர்ந்த பலவற்றையும் ஆராய்தல்வேண்டும். ஒன்றினொன்று தொடர்ந்து விரிந்து மலர்ந்து கூர்ந்து தோன்றும் தோற்ற முறைக்கு (Evolution) அனைவரும் உடன்படுகின்றனர் அதற்கேற்ப இயற்கைச்செயனிலை என்ற மனவமைப்பு எல்லா உயிருளிகளிடையும் காணக் கிடக்கின்றது. ஆதலின் கோழியினது இயற்கைச்செயனிலையை அறியவேண்டுமாயின், பறவையினத்தையும் ஆராய்தல் வேண்டும்; மற்றைய உயிருளிகளின் இயற்கைச் செயல்களையும் கண்டறிதல்வேண்டும்; மக்கள்செயல்களையும் ஆராய்தல்வேண்டும். இயற்கைச்செயல் புரிகையில் நம் உள்நுகர்ச்சியின் இயல்பை நாம் அறிவோம் அன்றோ. இந்நுகர்ச்சியினையும் அந்நடத்தையினையும் ஒன்றுவைத்து வைத்துப் பலவிடத்தும் ஆராய்ந்தால்தான் இயற்கைச்செயனிலையின் உண்மைத்தன்மையை உய்த்துணர்தல் கூடும். மேலும், பெற்றோரிடம் காணக்கிடக்கும் இயற்கைச்செயனிலை, பிள்ளைகளிடமும் வாழையடிவாழையென வரும் திருக்கூட்ட மரபினில் "தந்தையறிவு மகனறிவு'' என்று தொடர்ந்து வருவதையும் காண்கின்றோம். பறவைகள் முட்டையிடுகின்றன. அடை காக்கின்றன; தாய்மை எனும் அன்புபாராட்டிக் குஞ்சை வளர்க்கின்றன. ஆனால் இவற்றில் சில முட்டையிடுவதில் சிறந்தனவாய் இருக்கின்றன; சில அடைகாப்பதில் தலைசிறந்து திகழ்கின்றன. மற்றுஞ் சிலவோ, தாய்மையால் தனித்தெழுந்து விளங்குகின்றன. முட்டையிடுவனவற்றின் கால்வழி முட்டையிடுவதிலும், அடைகாப்பனவற்றின் கால்வழி அடைகாப்பதிலும் சிறந்து விளங்குகின்றன. கோழிவளர்ப்போர் இவ்வுண்மையை நன்கறிவர். இத்தகைய தலைமுறை (Heredity) ஆராய்ச்சியாலும் இயற்கைச்செயனிலையின் இயல்பு, விளக்கமுறுகின்றது.

இயற்கைச்செயல் ஒவ்வொன்றும், ஒவ்வோர் உடலமைப்பைப் பொறுத்திருக்கின்றன என உடல் நூலோர் எடுத்துக் காட்டுகின்றனர் இயற்கையமைப்பிற்கேற்ற செயல்களே இயற்கைச்செயல்களாகும். உயிருளிக்கு ஓர் உறுப்பிருந்தால் அதனைப் பயன்படுத்திக்கொள்ளும் ஓர் இயற்கைத்தகுதியும் அங்கேகாணக் கிடக்கின்றது. பயனை முன்னுணராது, பயிற்சி என்பதின்றியே உறுப்புக்களை இயைபுபடுத்தி இயக்குவதன்றோ இயற்கைச்செயலாவது? பறவையின் சிறகருகே ஒருநெய்ப்பை உண்டு; பறக்கும்பொழுது அப்பையைப் பிழிந்து நெய்ப்பசையைச் சிறகில் பாய்ச்சிக் கொள்கிறது. நெய்ப்பையின் இருப்பிற்கேற்ற செயலன்றோ ஈது! பாம்பின் பல்லில் நஞ்சு கிடக்கின்றது; அதனை அழுத்திக் கடித்துப் பிற உயிருளிகளின் உடலிற் பாய்ச்சுகின்றது இயற்கையமைப்பு அதனைப் பிடர்பிடித்து உந்துகிறது. உள்ளத்துடிப்பு ஒன்று பதைபதைக்கின்றது. உயிருளியும் அச்செயலைச் செய்

கின்றது முட்டைமேலே குந்திக்கிடப்பது கண்டு "இப்படியும் இதன் இயற்கை இருக்குமோ? ஈதென்ன வெறியா? முட்டைகளைக் கீழ்ப்பரப்பி மேலேகுந்துவதும் இன்பமோ?" எனச் சிலர் நகையாடலாம். ஆனால், நாம், கல்லின்மீது படுக்காமல் மெத்தைமேல் ஏன் படுக்கின்றோம்! இனிய உணவுகளை ஏன் விரும்பி உண்கின்றோம்? அறிவாராய்ச்சியாளர் 'இனிய உணவில் உயிர்வளர்கிறது' எனப் பின்னர்ப் பயனை எடுத்துக் காட்டுகின்றனர் என்பது உண்மையே. ஆனால், விருந்தாளி அறிவாரய்ச்சி செய்தபின்னரா அக்காரவடிசிலில் கையிடுகின்றார். அதற்குள் அஃது ஆறிப்போகு மன்றோ? நாக்கிற்கு நன்றாக இருக்கின்றதென்றே விரைந்துண்ணத் தொடங்குகின்றார். "ஏனையா உண்கிறாய்" எனக் கேட்டால், அவ்விருந்தாளி நம்மையே வெறியர் எனக்கொண்டு நகையாடுவர். அங்ஙனமே அடைகாக்கும் கோழியைக்கண்டு கேட்கமுடியுமானால், அதுவும் நம்மைக் கண்டு நகைக்கும். "அடைகாக்காத உயிருளியும் உலகில் உலவுகின்றனவே" என வியப்பெய்தும். இயற்கை யமைப்பிற்கேற்ற உள்துடிப்பு (Impulse) பின் செயலுறுத்தும் இயல்பினை நாம் அறிதல் வேண்டும்.

இவ்வாறு இயற்கையமைப்போடு எழுந்த உள்துடிப்பால் உண்டாகும் இபற்கைச்செயல்கள் ஒவ்வோர் உறுப்பையும் சார்ந்து விளங்குவதோடு ஒவ்வொரு நரம்பமைப்போடும் தொடர்புண்டு கிடக்கின்றன. இந்நரம்பமைப்புகள் முன்மூளையின் அடியில் கண்ணரம்பு தொடங்குமிடத்தில் காணக்கிடக்கின்றன. ஊற்றுத்தசையுருளைப்பற்றி (Glands) முன்னரே கூறியுள்ளோம். இத் தசைமுடிச்சுக்களிலிருந்து பாயும் அகத்துமிழ்நீர்கள் சில இயற்கைச் செயல்களை வலியுறுத்துகின்றன என்றும் உடல்நூலோர் எடுத்து விளக்குகின்றனர்.

இவ்வாறெல்லாம் இயற்கைச்செயனிலையையும் இயற்கைச் செயல்களையும் ஆராய்ந்தபோது, இச்செயல்கள் எவ்வெப்பொழுது எந்தவெந்த நிலையில் நிகழும் என் முன்னாகக் கூற முடிகின்றது. பூவினத்தை அறிந்தால் அதன் உறுப்பினமைப்பினை விளக்கமாகக் கூறுகின்றனர் மரநூலோர். அஃதேபோல ஒருயிருளியின் இனத்தை யறிந்தால் அதன் செயலினையும் உள்ளத்தியற்கைநூலோர் கூறுவர்.

இயற்கைச்செயனிலை என்ற இம்மனநிலையோ சிக்கலான நிலையாகும். குறித்த ஒரு காட்சிப்பொருளைக் கண்டால்தான் இயற்கைச்செயனிலை கிளர்ந்தெழுகின்றதெனக் கண்டோம். குறித்த ஒரு திறவுகோல் வந்தபோதுதான் பூட்டுத் திறக்கின்றது. இப்பூட்டே இம்மனநிலையின் ஒரு பிரிவு. இஃது உணர்வுத்துறை (Receptive side); இயக்கத்துறை மற்றொரு பிரிவாகும். இயற்கைச்செயல்கள் நிகழும்போது ஆற்றல் அலைபுரண்டோடுகின்றதன்றோ. அவ்வாற்றலை, அவ்வியற்கைச்செயல்களுக்கேற்ற உறுப்புக்களில் மடைபாய்ச்சி உடலை இயக்குவது இவ்வியக்கத்துறையே யாகும். (Executive side).

ஆற்றல் ஊற்றென்பது மூன்றாவது துறையோ? ஆற்றல் வெள்ளம் அலைபுரள்கின்றது என்றோம். ஆற்றொழுக்காக இடையறாது பெருக்கெடுத்து ஓடுகிறது. பின்னர்ப் பெருக்கடங்கி வற்றிப்போகின்றது. செயலும் ஒய்வடைகிறது. ஆற்றல் வெள்ளமே இயற்கைச் செயலின் வடிவமாகும். ஆற்றல் மிகுதியாலே அப்புறமும் இப்புறமும் கண்டபடி கால் கையை ஆட்டுகின்றோம், உடலை இயக்குகின்றோம். தட்டித் தடுமாறி அச்செயலும் இச்செயலும் செய்துவரும்போது, நமது செயல்களும் திருத்தமுறுகின்றன. அவ்வியற்கைச்செயனிலைக்கேற்ற செயலையும்செய்து முடிக்கின்றோம். இவ்வாறு வழிந்தோடிக் கலிங்கல் பாயும் ஆற்றலும் அவ்வகையால் பயன்படுகின்றது. அந்நிலையில், வேலையிலேயே கருத்தாக (Attention) இருக்கின்றோம் "கருமமே கண்ணாயினார்" என்று பாடுவதெல்லாம் அந்நிலையில் நின்றாரைப்பற்றித்தான். இவ்வாற்றலோ உடலாற்றலும் உள்ளத்தாற்றலுமாக விளங்குகின்றது. உள்ளே ஒடுங்கி (Potential) நின்ற ஆற்றல் கிளர்ந்தெழுந்து விளங்கித் தோன்றுகின்றது. ஒடுங்கிய ஆற்றல் விளங்குவது எப்போது? நமது நரம்பமைப்பானது, புலன்வாய் வழியாகத் தாக்குண்டபோதுதான் என்க. அவ்வாற்றலோ பல மதகுகளிலும் பாய்கின்றது. அங்கெல்லாம் அணையிடப்பட்டுத் தேங்கிக் கிடக்கின்றது. இயற்கைச்செயல் நிலையாகிய பூட்டை அதற்கேற்ற திறவுகோலால் திறந்தபோது, மதகுகளின் கதவுகளும் திறக்கின்றன இயற்கைச் செயல்கள் எழுகின்றன. இச்செயல்களின் இயக்குவாயே கடையான கால்வாயாக ஆற்றல் வெளிவருகிறது; செயல்களும் உண்டாகின்றன. இம்மதகுக் கதவுகள், முன் சொன்னபடி, கண்ணரம்பு தொடங்கு மிடத்தருகே (Optic Thalamas) இருக்கின்றன.

இவ் வாற்றல் ஊற்று ஒன்றோ பலவோ? எல்லா இயற்கைச் செயனிலைகளுக்கும் பொதுவாக ஒன்றே ஒன்றுதான் உள்ளது என்பர் ஒரு சாரார். ஒவ்வோர் இயற்கைச்செயலும் தனக்கேற்ற வழியில் அவ்வாற்றலை மடைமாற்றிப் பாய்ச்சிக்கொள்கின்றதென்பர். ஆனால், எல்லா இயற்கைச்செயல்களும் ஒரே அளவாக இந்நீரைப் பாய்ச்சிக்கொள்வதில்லை. ஒவ்வோர் இயற்கைச்செயலுக்கும் ஒவ்வோர் ஊற்றுத் தனித்தனி உண்டு என்பர் மற்றொரு சாரார். இயற்கைச்செயனிலை கிளர்ச்சியுற்றபோது யாதேனும் ஒரு செயலைச் செய்யவேண்டுமென்று பதைபதைக்கும் உள்துடிப்பு எழுகின்றது. இயற்கைச் செயனிலைக்கும், அதனைத் தூண்டிய கிளர்ச்சிக்கும் தக்கவாறு இவ் வுள்துடிப்பும் வேறுபடுகின்றது. எனவே 'இபற்கைச் செயனிலையின் ஆற்றல்' என்று பேச இடமுண்டு. உள்துடிப்பின் வன்மையைக்கொண்டு, ஆற்றலின் பெருக்கத்தை அளந்தறியலாம் அன்றோ?

ஆற்றல் பெருக்கெடுக்கும்போதும், உள் துடிப்புப் பதைபதைக்கும்போதும், இயற்கைச்செயலின் முடிவிலேயே முழு நோக்குடையராய் அதிலேயே முழுகி மறைகின்றோம். கண்ணும் கருத்துமாய் உழைக்கின்றோம். அப்போது உயிருளி முழுதும் எதிரூன்றி நிற்கின்றது. அதன் ஒவ்வோர் உறுப்பும், அதன் ஆற்றல் முழுதும், அச்செயலின் முடிவோடு இயைபுண்டு ஒருமுகப்பட்டு நிற்கின்றன. இவ்வாறு "கருமமே கண்ணாயினார்" நிலையையே கருத்தாயிருத்தல் (Attention) என்று கூறுவது. பொதுவாக எழும் மனவெழுச்சியும் உடற்கிளர்ச்சியும் மெய்ப்பாடு (Emotions) எனப்படும்.

ஆச்சரிய சூடாமணி

1. பர்ணசாலை அங்கம்

[156-வது பக்கத் தொடர்ச்சி.]

லக்ஷ்:—பொற்றாமரைமலர்த் தேனைப்பருகும்அன்னப் பெடையை நடுக்கடலில் யாராவது பார்ப்பார்களா? கொடுங் குறவரும் மருளும் மலையெங்கே; தாமரையின் வனப்பைக் கவரும் முகத்தையுடைய இப்பெண்ணெங்கே? ஆதலால் இவள் விஷயமாக நன்றாக ஆராயவேண்டும்—எனது தமையன் சீதையுடனிருக்குமிடம் இதோ இருக்கின்றது.

[ராமன் சீதையுடன் வருகிறான்]

இராமன்:—

மலர்த்தரு வனமூத் தியானம்
மஞ்சுசூ ழருவிக் குன்றம்
கலைமதி நஞ்செய் குன்றம்
கடுகுவெண் குருகின் கூரல்
உலைபடு காற்றாற் சிந்து
முறுதுளித் திரையு லாவு
மலைபுனல் வேனில் வாவி
மலர்களுஞ் சிவிறி யாமே.

பார்த்தாயா! பூத்த மரங்களடர்ந்த வனமெல்லாம் நமக்கு உத்தியானவனமே; மேகங்கள் கவிந்து அருவிகள் விழும் மலைகளே நமக்குச் செய்குன்றுகள்; வெண்குருகுகள் நீரில்படிந்து நீந்திச்செல்லும்போது உண்டாகும் காற்றினால் திவலை சிதறும் சிறு அலைகளையுடைய சுனைகளே நமக்கு வேனிற்காலத்தில் நீராடும் குளம்; மலர்மணம் படிந்து கலந்த தாமரைக்காற்றே நமக்கு விசிறிக் காற்றாகும். ஆதலால் காதலி, எனக்கு நகரவாசத்தைவிட வனவாசம் சிறப்பென்று புலப்படுகின்றது.

சீதை:—நாத! அயோத்தியில் நமதன்னையர்முதல் ஏனைச் சுற்றத்தார் வருந்தா திருப்பாராயின் நான் வாழ்நாள் முழுவதும் இங்கேயே இருக்க விரும்புகின்றேன்.

லக்ஷ்:—(முன் பார்த்து) ஆ! அண்ணல் இதோ இருக்கிறார். "ஐயோ! விதியின் வலிமையே வலிமை"! இல்லை; இல்லை. கைகேசியின் செய்கையே கொடுமை;

பட்டுடை நீத்திவ் வையன்
பழுநிறச் சீரை பெற்றான்
மட்டுடை மலர்க்காற் சீதை
வஞ்சச்செந் நாய்செல் லாற்றி
லெட்டிட நகரத் தாரோ
டேந்தலாம் பரத னின்ன
லுற்றிடக் கைம்பெண் ணானை
யுன்செயல் முனிகின் றேனே.

கைம்பெண்ணான கைகேயி! உன் தீய செயலால் தமையனே வெண்பட்டாடையை விட்டுச் செந்நிறமரவுரி தரித்தான்; சீதையோ செந்நாய்கள் நடந்த காலடித்தடத்தில் நடக்கநேர்ந்தது; பரதனும் கோசலரும் தமையனது பிரிவாற்றாமையால் வருந்தி யிளைத்தனர்; இவ்வாறு அனைவர்க்குந் துன்பங்கொடுக்கும் உன் கொடிய செய்கையைத் தீய்க்கவேண்டும்—தமையனிடம் போவோம். (பக்கத்தில் வந்து) ஐய! வெற்றியுண்டாகுக.

ராம:—லக்ஷ்மணா! நீ தொடங்கிய காரியத்தைச் செய்து முடித்தாயா?

லக்ஷ்:—அண்ணலே! ஆம்.

ராம:—ஆயின், அவ்விடத்திற்குப் போக வழி காட்டு.

லக்ஷ்:—நல்லது, அப்படியே. இதோ, இங்கே—

ராம:—(கோபத்தினாற் சிவந்த லக்ஷ்மணனது முகத் தோற்றத்தைக் கவனித்து) சிறுவ இலக்ஷ்மணா! இக்ஷ்வாகு மரபுமுறைப்படி நாம் வனத்திற்கு வந்தோம்; வழியில் மோக்ஷமார்க்கமுனிவரை வழிபட்டும், புண்ணிய தீர்த்தங்களில் விரும்பியபடி நீராடியும் களிப்படைந்தோம்; இவ்வாறு நாம் மனக்கவலையின்றியிருப்பதற்காகக் கைகேயியன்னை, கருணையோடு செய்த ஓர் சூழ்ச்சியால் நமது பூபாரப்பொறுப்பை நீக்கினாள்.

லக்ஷ்:—'நல்லோர்க்கு எல்லாம் நல்லது' என்று உலகத்தார் கூறுவது உண்மையே.

ராம:—லக்ஷ்மணா! இன்னும் உனக்குத் தாயின் மேலுள்ள கோபம் தீரவில்லையா?

லக்ஷ்:—ஐய! பால்சுரக்கும் தாயரிருவரும் களிப்புடன் பார்த்திருக்கும்போது விதிப்படி கொடுத்த பொற்குடத் திருமஞ்சன நீரைத் தந்தை வாங்கித் தன் ஆனந்தக்கண்ணீருடன் கலசமாட்டுவதைத் தடுத்தாள்; அதுவுமன்றி அனைவருடைய களிப்பென்னும் வெளிச்சத்திற்கு ஊழிக்கால இருள்போன்றவளுமான பரிவற்ற அவளோ என்தாய்!

ராம:—(காதைப் பொத்திக்கொண்டு) தாய் நிந்தை கேட்ட பாவந் தவிர்க, தவிர்க! சிறுவ, கிடைத்ததைக் கொண்டு நிறைவடையாதவர் மனது தீமையை நாடுகின்றது; பெருந் துன்பந்தரும் நாட்டி லாசைவைத்துத் தாயை இகழ்கின்றாயே; பாவியான அரசர் வாழ்வை உற்றுக்கேள்; இந் நிலமகள் அரசியலறிந்த வீரமன்னரனைவர்க்கும் பொதுமகளாம்; அரசனுக்கு வாள் முதலிய ஆயுதங்களே நட்பினரன்றி மற்றவரில்லை; அவனுக்குப் புதல்வரும் உடன்பிறந்தோருங் கூடப் பகைஞராவர். அன்றியும் பிறர்செய்யும் பாவத்திற்குத் தான் நரகதுன்பம் பெறவேண்டும்; ஆனால் அரசனுக்கு ஊதியமென்று சொல்வது வெண் குடையும் சாமரமுமே யாகும்.

லக்ஷ்.—நான் நாட்டில் ஆசைவைத்துச் சொல்லவில்லை.

ராம:—பிறகு உன் கோபத்திற்குக் காரணமென்ன?

லக்ஷ்:—முறைமை தவறியதே என்பதுதான்.

ராம:—எனின், என்னையே முதலில் பழிக்க வேண்டும்; இந்திரனைப்போல இதுவரை ஜனரஞ்சகமாக ஆட்சிமுறை செய்துவந்த தந்தை இருக்கும் பொழுதே பட்டாபிஷேகம் வேண்டுமென்ற ஆசையினால் வெட்கமின்றிச் சிங்காதனமேற இருந்தேனே!

சீதை:—சக்கிரவர்த்தி திருமகனார் தாங்கள் கூறியது உண்மையே.

லக்ஷ்:—தனக்கு மூப்பு மிகுந்துவிட்டதென் றன்றோ தந்தை இதற்கிசைந்தார்.

ராம:—ஆயின், பரதன் என்னைவிட வயதில் குறைந்தவ னன்றோ?

லக்ஷ்:—தந்தையானவர் தனக்குப் பூமியைக் காக்கத் திறமையில்லையென் றெண்ணியே கொடுத்தார்.

ராம.—சிறுவ! உற்றுக்கேள், தன் வலிமையால் அசுரர்களை வேரறுத்த சீர்த்தியைக் கொண்டு தேவருலகத்தையும் ஆளும் அரசருக்குத் தன் நாட்டைக் காத்தளிக்கத் திறமையில்லை என்றுகூறுவது தவறு.

லக்ஷ்:—மற்று; அவள் புத்திரவாத்சலியத்தால் இவ்வாறு சிறுமை செய்தாளே என்றுதான் நோகின்றேன்.

ராம:—இது உலகவழக்கம்? பல புதல்வர்களுடையார்க்கு ஒரு குழந்தையிடம் அதிக அன்பு தோன்றுவது இயற்கை. எல்லாச் சகோதரரிடத்திலும் சமமான அன்பு வைத்திருக்கின்றாயா நீ?

லக்ஷ்:—அதிகம் சொல்வதாலாவதென்ன. தந்தையின் மரணத்திற்கு அவளே காரணம்.

ராம:—இல்லை இல்லை! நந் தந்தைக்கு அவ்வன்னை ஒரு தவறும் செய்யவில்லை. யோசித்துப் பார்; முன்னொருகாலத்தில் நம் கோத்தந்தை வேட்டைக்குச் சென்றிருந்தார்; அங்கு ஒருநாட்காலை ஓர் இருடிகுமாரன், வானப்பிரஸ்தராயிருக்கும் கண்தெரியாத தன் தாய்தந்தையர் காலைக்கடன் முடிப்பதற்கு, நீர்கொண்டுவரச் சுனையினை நண்ணித் தண்ணீர் முகந்தான். குடத்தில் முகக்கும் ஓசையை, யானை நீர் பருகும் தழனியென்றெண்ணி ஓசைக்குறி பார்த்து அம்பு எய்தார். அவ்வம்பு பாய்ந்து அச்சிறுவன் மாண்டான். அதுகேட்ட அவன் தாய் தந்தையரும் 'என் மகனைக் கொன்றவனும் புத்திரசோகத்தால் மாள்வான்' என்று சபித்தனர்—அதுவே காரணம்.

சீதை:—அன்னதோர் முன்னூழ்வினையே காரணமாயிருக்கவேண்டும்; இல்லையேல் எவள்தான் தன்னையும் நாட்டையும் நாசஞ் செய்வாள்.

லக்ஷ்:—எனின், யானே குற்றவாளி; ஐய, காப்பாற்றுக. வார்த்தை சில வழங்கியவாங்கே வழிநடை வருத்தம்தெரியாமல் வந்தோம்; தாங்கள் பர்ணசாலைக்குள் இனி எழுந்தருளுங்கள்.

ராம:—நீயும் ஓரிடற்திற் சென்றமர்ந்து இளைப்பாறு.

லக்ஷ்:— நல்லது; அப்படியே. (போயினன்)

ராம:—(பர்ணசாலைக்குட் சென்று எல்லா இடத்தையும் பார்த்து) சீதா, குழந்தை லக்ஷ்மணனுக்கு எதனிலுங் கைவருமித் திறமையைப்பார். வில்லின் நாணொலியால் மிருகங்களையோட்டிப் பர்ணசாலை கட்டி, புதிய மலர்களால் மென்மையாய அமளியும் பிரம்புக்கொடியால் நல்ல பீடமும் செய்திருக்கின்றான். மகரந்தங் கலந்த நீர்கொண்டு முற்றந் தெளித்திருக்கின்றான்.

சீதை:—ராஜகுமார! மலருந்தளிரும் பொலிவுறச் சமைத்தவிப்பர்ணசாலையின் சிறப்பைக்கண்ட நமக்கு மாடமாளிகைகளைப் பற்றிய பெருமை குறைந்தது.

ராம.—கிளிமொழியாய்! இது மனித சஞ்சாரமற்ற விடம்; வழிநடந்த களைப்பினால் செவ்விதழ் உலரும்படி வீங்குகின்ற பெருமூச்சினால் நின்காமர்ச் செம்முகம் சோர்வுற்றிருக்கிறது; ஆகையால் புழுதி படிந்த கிளிநிறப் பச்சைநிறமுடைய கச்சைச் சங்கையின்றி அவிழ்த்து விட்டுக்கொள்.

சீதை:—அரசகுமார! ஆணையின்படியே; (எல்லோரும் போதல்)

(முதல் அங்கம் முற்றிற்று)

இலஞ்சிப் பாவை.

[153-வது பக்கத் தொடர்ச்சி]

7. இராதாகிருஷ்ணன் சீற்றம்.

ஆற்றல னனைய ளுகி யறிவழிந் தயரும் வேலை
சீற்றமென் றொன்று தானே மேனிமிர் செலவிற் றூகித்
தோற்றிய துன்ப நோயை யுள்ளுறத் துறந்த தம்மா
ஏற்றஞ்சா லாணி யாணி யெதிர்செலக் கடாய தென்ன.

கம்பராமாயணம்.

மால்கொண்ட மால்வண்ணனது மயர்வுறு செயலைக்கண்டதும் இராதாகிருஷ்ணனுக்குத் துன்பனோ யுள்ளடங்கிச் சீற்றமே மீக்கூர்ந்து சித்தமுற்றுங் கவர்ந்தது. புகைத்தெழு வன்னி, வகைவகை யெழுங் கருந்தூமத்தினிடையே, நெடு நா நீட்டிச் சிறுபொழுதி லனைத்தையு முண்ணும் பெருந்தீயாய் நிமிர்தல் போல், செயலற் றறிவழிந்துகிடந்த அவனுள்ளத்திற் பொறுமையென்னும் சூறுவளி சுற்றச் சிறகப்பற்றிய சினத்தீ விரைவில் கானெரி துற்றெனப் பெருந்தீயாய் மூண்டது. ஸ்ரீபாலனிடமிருந்து கையை வாங்கி, அதுகொண்டு மால்வண்ணன் மார்பிலிருந்த மேலாடையைப் பற்றினவனு யவனை யுறுத்துநோக்கி உரத்த குரலுடன் உதாசனித்த மொழி சில சொல்லன்மேயினன். "இதழ்ப்புறத்து மீசை முளையாச் சிறு பயலே, பின்னே போ, போ பின்னால்! சிறிது நாளைக்குமுன் நானுனக்குக் கற்பித்த நற்புத்தியை மறந்தனையோ? இன்னே யுன்னையான் ஒறுக்காது தாழ்தற்கு இவ்வில்லமும், ஸ்ரீபாலரும், அதோ நிற்கும் அணங்குமே காரணமாதலின், அவர்களுக்கு உன் நன்றியைச் செலுத்துதி".

தன்மேல் வீழ்ந்த கையை வலுவி லப்பாலெறிந்து, போர்முரசங் கேட்ட பரிமாவென வெம்பி "வாளையொழித்து வேறெதையும் நான் துணையாய்க் கொள்ளின் என்தலையில் இடிவீழ்க" எனக் கட்டுரைத்தான் மால்வண்ணன். இருவரும் ஒருவரையொருவர் அப்புறத்தே தள்ளி, மற்றொழிற் செருவின் மட்டித்து, முட்டியுத்த முற்ற வெதிர்முட்டிப் பின் தத்தம் உடைவாளிற் கைசெறிந்தனர். இமைப்பினில் இரத்தம் பெருகும் படுகளமா யவ்வில்லம் மாறுமெனக் கண்ட ஸ்ரீபாலனும் எழுந்து, உரனுடைத் தன்னுருவத்தை யிடையே யெறிந்துநின்று, "நில்லுங்கள்; நில்லுங்கள்! இனி, முதலில் எற்றுபவன் என் பகைஞன்—நானே அவனுடன் போர்புரிவேன். பித்தம் பிடித்த பேதையரே யொழியுங்கள். என்ன! என்ன! ஸ்ரீபாலனது குடும்ப மவ்வளவோ குன்றிவிட்டது! இரண்டு மூர்க்கரில் முதன்மைபெறு மூர்க்கனோ என் மங்கையைச் சிறைகொண்டு செல்பவன்?" எனக் கடுகடுத் துரைத்தான். உடனே யிருவரும் கலந்த கைகளை விலக்கி, வெட்கந் தூண்ட வேறொன்றும் செய்யுந் துணிவிலராய்க் காலை முன்வைத்து, வாள் மேற் கைவைத்து ஒருவரை யொருவர் வெறித்து நோக்கிநின்றனர்.

தென்றல்முற்றிச் சுழற்காற் றுவதன்முன்னம் இராதாகிருஷ்ணனது இருகரங்களும் மாலினியால் பற்றப்பட்டன. அஞ்சி அரற்றிய சுதஞ்சனையின் குரல், மூண்டெழு சினத்தால் முழுதுந் தூர்ந்த மால்வண்ணனது மனத்தில் ஏதோ கனவின தகவயின் கேட்கும் ஒலியெனப் பட்டது. உடனே இராதாகிருஷ்ணன் தன் பிழையை யுணர்ந்து, சினத்தைக் காத்து, புண்ணுளை கோலிட்டன்ன கேட்போன் மனம் சில்லரிச் சிதைவுகொள்ள மிருநகை மொழிகள் சில சொல்லத் தொடங்கினன்.

"இருள்நீங்கிப் பொழுதுபுலரும் வரையில் இவ்விடமே கெடுதியின்றிஉறைந்திரு. பெண்டிரை யண்டிஉவளகத்திருக்கும் உனது முகம் பனிக்காற்றி லடிபடின் பழுதடையும். அதன் நிலைகுலையச் செய்வது நேரிதன்று. வைகறையாமந் துயிலுணர்ந் தெழுந்து விஜயசேன மன்னனிடம் விரைந்துசென்று எவருமறியாக் காட்டா ணிதைக் காட்டிக்கொடு. இன்னுமவன் எனதிருப்பிடத்தைப் பற்றி யறிய விரும்புவானேல் அவனுக் குரைக்கவேண்டியனவற்றையெல்லாம் எடுத்துரை. இதற்கிருக்கும் நேர்வழிகளையுங் கிளைவழிகளையும்பிறவழிகளையும்பிழையா துரைப்பாய். எனதுபடைவீரர் தொகுதியையும், அவரது பண்ணுறுநிலையையும் மொழிய மறவாதே. ஆயினுமொன்று புகல்வாய்: இவ்விடத்தையும் ஏரியையும் போர்க்கோலங்கொண்டு நான் புரப்பேனென்றும், அடிமைத் தன்மை அடையாது தமதுவிருப்பம்போல் தருக்கித்திரியும் மலைநாட்டாரோடு மன்னவனுக்குத் தொண்டுபூண்டு அடிவருட ஒருநாளும் இணங்கேனென்றும் இயம்புவாய். அடே, ரங்கா! (அரங்கன் வர) காலையில் இவனுக்கோர் தீதின்றி யழைத்துபோய் நமது காவலுக்கப்பால் விட்டு வா."

பிள்ளையென எண்ணி எள்ளிய ஏழையோனை வெல்லும்வகை அமைதியே. இதனைச் செவ்விதினறிந்த மால்வண்ணன், பொறுப்பில்லாச் சிறுவனெனப் பொங்கிவழியாமல், அமைதியுடனும் ஆற்றலுடனும் இறுத்தனன் எதிர்மொழி. "அரும்பெறற் பாவையை அடைக்கலங் கொள்ளும் பெரும் பேறு பெற்ற இச்சில்லைச் சிறுகுடில், வழிபறி வினைஞர் உறைவிடமெனினும் புனித மாயதே. ஆதலின், நின் புன் குடில்காட்டிப் புலம்பற்க. விண்ணவர் நாட்டுவனிதை யுறையும் வீடு வீடாகும்மே. அதன் காரணமாய் நீ கொண்ட கவலையொழி. உன்னைப் பகைத்துக் கொள்ள அஞ்சுவோரிடம் உன் போலி யுபசாரத்தைக் காட்டுவாய். அருணன் அலர்கதிர் பரப்பும் நடுப்பகல்போல், நள்ளிருளிலும் மலைவழிகள் எனக்கு அச்சமற்றவை. இவை நடுவே, கொள்ளையிடுவோர் பலருடன் இராதாகிருஷ்ணன் கூடிக்கரந்திருப்பினும் யானஞ்சேன். ஸ்ரீபாலரே! சுதஞ்சனே!—இல்லை இல்லை! நான் இவ்விடம் விடைபெற வேண்டியதில்லை. முழங்கு கடல் ஞாலம் முழுவதும் திரியினும், இன்னுமோர்முறை உம்மைக் காண்பல். தருக்கித் திரியும் தலைவ, நாமும் விரைவிற் கூடுவோம்" என்றிங்ஙனங் கூறி அவ்விடம்விட்டு நீங்கி முன்பின் பாராமல் வழி நடக்கலுற்றான். நெடுவழி யேகியபின்னரு மிவனைப் பின்பற்றி வந்ததோ ருருவம். தன் னுள்ளங்கவர்ந்தோங்குஞ் சின மாறியபின்னர்த் தொடர்ந்துவந்தவன் ஆலாலனென வறிந்தா னிளைஞன். ஸ்ரீபாலனது முகக்குறிப்புக் கண்டு தன்னுணர்வற்ற தனிச்செல்வனைத் தொடர்ந்துவந்தன னிவன். கவலையுடன் வந்த விவன் மறுநாள் இராதாகிருஷ்ணன் அந்நாட்டு வழக்கம்போல் எரிபந்தம் விட்டு, நாடெங்கும்போக்கி, தன்னினத்தராய வீரரையழைக்க ஆணையிட்டிருப்பதாயும், தலைவன் கட்டளைப்படி தலைக்கூடும் வீரர்முன்னவ னெதிர்ப்படின் கேடுநேரக் கூடுமென்றும், ஆதலால், ஏரியைக்கடந்து செல்வதே மேலானதென்றும் ஓடம்ஒட்டத் தான் உடன்வந்திருப்பதாயும் தெரிவித்தான். இம்மொழிக ளவன்காதிற் புகுந்தில. அவை யாவும் காற்றிற்கே இரையாயின. விரைவி லிருவரும் மணற்புறமடைந்தனர். அவ்விடந் தனது ஆடைகளைக் களைந்து, வாளுங் கருவியும் வகையுடன் சுருட்டி, தண்ணீரி லிறங்கற்குரிய உடைகொண்டு நின்றபின், மால்வண்ணன் ஆலாலனதுகரங்கள்பற்றிப் "பற்றுதலுள்ள பண்டைக்காலப் பண்ணவனே! நான் போய்வருகின்றேன். ஐயோ! அவர்கள் தங்குவதற்கு வேறோரிடங் காண்பிக்கத் தற்கால மென்னால் இயலவில்லையே! எனது நாடும் செல்வமும் அரசனிடம் அகப்பட்டுள்ளன. எனது படையையும் மன்னனுக்குத் துணையாய் என் சிற்றப்பன் நடத்திவருகின்றான். என்னாலாவது யாதுளது! எனது எதிரிகளை யடக்கவும், எனது நண்பர்களுக் குதவவு ம் என்னிடம் வாளும் கையுமே யுள்ளன. இவற்றோடு என் நல்லெண்ணமும் சேர்ந்து, நடுக்கமுறுத்தும் பகைவரை வெல்லுமோ? ஓ! என் எண்ணங்களெல்லாம் வீண்! வீண்! ஆயினும், என் சுற்றத்தாரிலோ, பரிவாரத்திலோ என்னிடம் உண்மையன்புள்ள உறவினன் உள்ளானாயின், ஸ்ரீபாலர் இன்னும் நெடுநாளைக்கு வேட்டையில் அலைப்புண்ட மான்போல் இங்குமங்குநிலைகுலைய வேண்டியிராது. விரைவிலேயே அவர்களுக் கடைக்கல மளிப்பேன் யான். கர்வத்தால் தலைதெறிக்குமக் கொள்ளைக்காரத் தலைவனோ—சரி சரி வீண் பொருமை பேசுவதிற் பயனில்லை. இராதாகிருஷ்ணனுதவியை எவ்விதத்திலும் நான் நாடவில்லையென் றவனுக் கறிவியும். என்னை அக்கரைசேர்க்க அவனது படகினுதவியையும் தேடவில்லை யென்று தெரிவிப்பீர்" என்றுசொல்லி நீரிலிறங்கி நீந்தினன். திரைகளின் மேற் றலைநீட்டி, இருபுறமுங் கரத்தால் நீரை வாங்கி

நீர்ப்பறவையென ஏரியின்மீ தேகினன். கவலையுற்ற ஆலாலனது கண்கள், ஏரியின் நாப்பண் அவனுருவினைக் காண உற்றுநோக்கி யிளைத்தன. தாராபதி திரைகளினிடையே துளங்கு மமயம் கருநிழலென அவனுருவம் கரையிலிருப்போன் கண்ணிற் பட்டது.

மால் - ஆசை. மயர்வு - மயக்மம். மீக்கூர்ந்து - மிகுந்து. வன்னி - நெருப்பு. சூறுவளி - கடுங்காற்று. கான்எரிதுற்றென - காட்டுத்தீ பரவியதுபோல். உறுத்து - கோபித்து.

நீந்திச்சென்றவனது வல்லமையால் ஏரியும் விரைவில் பின்கழிந் தகல. அக்கரை யடைந்ததற் கறிகுறியென வொலித்தது மால்வண்ண னாற்றிய குரலும். அதைக் காதுகுளிரக் கேட்ட ஆலாலனும் மகிழ்ச்சியுடன் மனைநோக்கி நடக்கலுற்றான்.

ஒறுத்தல் - தண்டித்தல். சில்லரிச் சிதைவுகொள்ள - பருக்கைக்கற்களைப்போல் தகர்ந்துபோக. உவளகம்-அந்தப்புரம். வைகறை - விடியற்காலம். தாராபதி - சந்திரன்.

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய் மொழி.

[149-வது பக்கத் தொடர்ச்சி]

முதற்பத்து

6-ம் பாசுரம்.

நின்றன ரிருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்
நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்
என்றுமொ ரியல்பினர் எனநினை வரியவர்
என்றுமொ ரியல்வொடு நின்றவெந் திடரே.

பதவுரை

நின்றனர் - நின்றவர்கள்; இருந்தனர் - உட்கார்ந்தவர்கள்; கிடந்தனர் - படுத்தவர்கள்; திரிந்தினர் - சஞ்சரிப்பவர்கள்; இருந்திலர்-இராதவர்கள்; கிடந்திலர்-படுக்காதவர்கள்; திரிந்திலர் - சஞ்சரிக்காதவர்கள்; என்றும் - ஸர்வகாலத்திலும்; ஓரியல்பினர் - ஒரு தன்மையையுடையவர்; என்று-என; நினைவரியவர் - நினைப்பதற்கு முடியாதவர் - (அநேக பல பிரகாரமாம் நடப்பில் காண்கிறபடியால் ஒரு பிரகாரமாக நினைக்கவுங்கூட முடியாதவர்.) என்றும் - எக்காலத்திலும்; ஓரியல்வொடு நின்ற - நிலைநிற்கும் ஒரே ஸ்வபாவத்தையுடையவர்; எம்-எம்முடைய; திடரே - திருடமானவர். அதாவது வேதப்பிராமணங்களாலே திருடமாய் ஏற்பட்டவர், பரமபுருஷன்.

கருத்து:—சேதநமும் அசேதநமுமான ஸர்வ வஸ்துக்களின் ஸர்வக்கிரியைகளும் நிவர்த்திகளும் பகவானுடைய ஸங்கல்பம் என்று கூறுகிறார்.

உலகிலுள்ள எல்லா வஸ்துக்களும் எந்தஎந்தச் சேஷ்டை அமைதியிலிருந்தாலும் எல்லாம் பகவான் என்றல்லவோ பாசுரம் காண்கின்றது. அவைகளின் சேஷ்டைகள் அமைதிகள் அனைத்தும் பகவத் ஸங்கல்பமென்று பொழிப்புரை கூறலுங் கூடும் ஏனென்றால், முன்பாட்டுக்களில், பகவான் ஜகத்திலுள்ள ஸர்வ வஸ்துக்களிலிருந்தும் பிரிந்துள்ளவன் என்று கூறியபடியால் அவைகள் ஆகக்கூடா. ஆனால் அப்பொருள்களின் சேஷ்டை நிவர்த்திகள் பகவத் ஸங்கல்பமென்றே இப்பாட்டுக்குப் பொருள்கொள்ள வேணுமென்பது தாத்பரியம்.

7-ம் பாசுரம்.

திடவிசும் பெரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே.

பதவுரை.

இவை - ஆகாசம் தேஜஸ் (அக்நி) காற்று நீர் நிலம் இவைகளின் காரியங்களாகிய ஜகத் வஸ்துக்களை, உண்ட - பிரளயகாலத்தில் ஸம்ஹரித்த, சுரன் - தேவனை திருமால், திட - திருடமான (வடசொல்லின் திரிபு) அதாவது வேதப்பிரமாணத்தால் ஸித்தமான, விசும்பு - ஆகாசம், எரி - அக்நி (தேஜஸு) வளி - வாயு, நீர், நிலம், இவைமிசை - இந்தப் பஞ்சபூதங்களின் மேல், படர்பொருள் - படராநின்ற பதார்த்தங்கள், அதாவது இவைகளைக் காரணமாகக்கொண்டு அமைந்த வஸ்துக்கள்; முழுவதுமாய் - இவைகளில் அந்தர்யாமியாய் நின்று, "வெகுவாக ஆகப்போகிறேன்" என்று பகவத் ஸங்கல்பத்தால் எல்லாமாய் ஜநித்து அவை முழுதுமாய்; உடல்மிசை - தேகத்தின்மேல்—அதாவது தேகத்தில், உயிரென - ஜீவாத்மாவானவன்போல் (உயிர்-ஆத்மா); அதாவது,ஜீவாத்மா உள்ளிருந்து தேஹத்தை நியமித்து நடத்துவது போல், அவை அவை தொறும் - அந்த அந்த வஸ்துக்கள்தோறும், கரந்து - மறைந்து, உபநிஷத்தில் கூறியபடி "ய : பிருதிவி சரீரம் யமாத்மா நவேத' ஒருவருக்கு மறியக்கூடாத நிலையில்; எங்கும் - எல்லவிடத்திலும்; பரந்து - நடத்துவதால் வியாபித்துக் கொண்டு; சுடர்மிகு - தெளிவான முன்பின் பாதங்களில்லாத, சுருதியுள்-சுருதிகளிலே, உளன் - இருப்பவனாக ஓதப்பட்டவன்.

கருத்து:—எவ்வண்ணம் இந்தச் சரீரத்தை அதிலுள்ள ஆத்மா நியமிக்கும்முகத்தாலே வியாபிக்கிறதோ அவ்வண்ணமே, எம்பெருமான் பிரிதிவியாதி பஞ்சபூதங்களையும் அவைகளால் அமைக்கப்பட்ட ஸம்ஸ்தவஸ்துக்களையும் நியமிக்கிறமுகத்தாலே வியாபிக்கிறான். எந்தப்படி இது அறிந்தபடி என்றால் — பிரத்தியக்ஷமாய்நாம் ஆத்மா உடலை தாங்குவதாய்க் காண்கையாலும் வேதப் பிரமாணத்தாலும், அறிகிறோம். இதுபோலவே முன்றும்பாட்டில் "அருவினன்," அதாவதுஸூக்ஷ்ம ஆத்மாக்களுக்கும் அந்தர்பூதன், என்று சொல்லியிருப்பதால் பக்தமுக்த நித்தியர்களுக்கும் ஆத்மபூதன் என்று ஸித்திக்கின்றது. இவ்விதம் கலந்திருந்தாலும் எம்பெருமான் அந்த அந்த வஸ்துக்களின்தோஷங்களால் பீடிக்கப்படாமல் நிற்கிறானென்று முன் "புலனலன்" என்ற இடத்தில் சொல்லியாயிற்று.

இப்பாட்டில் ஸித்தித்த அர்த்தம், எம்பெருமான் ஜகத்துக்கு ஆத்மா வென்றது. இதை வேதாந்திகள் "சரீர ஆத்மபாவம்" என்பார்கள். ஆழ்வார் நறுந்தமிழால் "உடல்மிசை உயிரென்று" மேல்கண்ட அர்த்தத்தை அருளிச்செய்கிறார். மேல் 8-ம் பத்து

5-ம் பதிகத்தில், இச் சரீர ஆத்மபாவத்தைப் பரக்கப் பேசி அத் தசகத்தின் "யாவையும் எவரும் தானாய்" என்ற பாசுரத்தில் இந்தப் பாவம் சாஸ்திர சம்பந்தமன்றியும் யுக்திக்கும் பிரத்தியக்ஷத்துக்கும் ஸங்கதமாய்ப் பொருந்துமென்று நம் மனது நன்றாகத் தெளியும்படி அருளிச்செய்கிறார்.

8-ம் பாசுரம்.

சுரரறி வருநிலை விண்முதல் முழுவதும்
வான்முத லாயவை முழுதுண்ட பரபரன்
புரமொரு மூன்றெரித் தமரர்க்கும் அறிவியந்து
அரனய னெனவுல கழித்தமைத் துளனே.

அவதாரிகை:—இதுவரையில் நம்மாழ்வார் கற்பித்த தத்துவங்களை இங்குஒருவாறு சங்கரகிக்கலாம். இரண்டாவது பாசுரத்தில், உரைத்த இஜ்ஜகத்தின் அசேதந வஸ்துவைக்காட்டியும், உலகத்தில் இந்த அசேதந வஸ்துக்களில் சிலவற்றுள் வியாபித்துக்கிடக்கும் காமத்தால் கட்டுண்ட ஜீவாத்மாக்களைக் காட்டியும்,மேல் அப்பிராகிருத வைகுண்ட லோகத்திலுள்ள முக்தர்கள் நித்தியர்களைக் காட்டியும், ஒன்றும் பாட்டில் எடுத்துரைத்த திவ்விய மங்கள விக்கரகனை பகவான், வேறுபட்ட விலக்ஷணனென்றும், அந்தப் பகவான் அல்ப அஸ்திரஸத்துவ தோஷங்கள் கலவாத பரிபூரண உயர்வுடையவனென்றும் கூறியாய்விட்டது. இந்த மேல் 7-பாட்டுக்களாலும் பகவானுடைய திவ்வியாத்மசுவரூபத்தைப் பிரம்மாண்டத்திலும்,அப்பிராகிருதலோகமாகிற வைகுண்டத்திலும், அசேதநமென்ன சேதநமென்ன எல்லா வஸ்துக்களும் முக்கியமாய் ஆச்ரயித்திருக்கிறதென்று சொல்லியாய்விட்டது.

இவன், மேற்கண்ட எல்லா வஸ்துக்களுக்கும் ஆத்மாவாயமைந்த அந்தர்ப்பூதனாய்நின்றாலும் அவற்றின் தோஷங்களில் தோய்விலனாய், அவைகளின் ஸ்வரூப ஸ்திதி பிரவர்த்திகளை நடத்திவைக்கின்றானென்று மூன்றும் பாட்டில் கற்பித்தார். அடுத்த நாலாம் பாட்டில், ஜகத் ஸமஸ்த வஸ்துக்களினுடைய ஸ்வரூபம் பகவானது அதீநமென்றுஅருளிச்செய்தார். ஏனென்றால் அவைகளை நடத்தும் திறத்தில் அவைகளை விட்டுப் பிரிக்கவொண்ணாத நியமனதிகாரியாய் நிற்கிறானென்றார். அடுத்தபாசுரத்தில் மனுஷர்கள் விதிப்படி வழிபடும் தெய்வங்களுக்கெல்லாம் தானே உள்நின்று பூஜைபெற்று அத்தெய்வங்களின் மாட்சிமைக்கு யாதொரு குறைவுமின்றியே அவரவர் கோரும் பலன்களை அடைகிறார்களென்றுஞ்சொல்லி முடித்தார். வேள்விகொண்டே உலகசக்கிரம் பிரவர்த்திக்கிறதென்று கிருஷ்ணபகவான் பணித்ததை இங்கு ஞாபகம்செய்துகொள்ள லவசியம். பகவத்கீதை மூன்றுவது அத்தியாயத்தில் 10-வது சுலோகம் தொடங்கிக் கற்பிக்கிற விடயங்களை ஒருவாறு சுருக்கமாய் எடுத்துக்கூறுதல் சங்கதமாகிறது. 11-வது சுலோகம் முதல் 15-16 சுலோகங்களில்,"யக்ஞயத்தாலே தேவதைகளை ஆராதனம் செய்யுங்கோள். அவர்கள் பிரதிபலனாக உங்களுக்கு மழை பெய்து ஸஸியங்களை வளர்த்து உங்களுக்கு அன்னமளித்துச் சரீரங்களைக் கொடுத்துப் போகங்களை அளிப்பார்கள். இந்த யக்ஞங்கள் வேதங்களில் கூறப்பட்ட கர்மங்கள்; கர்மங்கள் உங்கள் சரீரங்களால் ஏற்படுவன",என்று, பகவான் ஸர்வ கருமங்களுக்கும்பலன் கொடுக்கும் ஈசன் ஆனதால் ஜகத்ரக்ஷணம் அவனுடையதென்று சொல்லியதை இப்பாட்டுச் சித்தாந்தம்கூறி நிற்கிறது. பிறகு அடுத்த 6-ம் பாட்டில் ஸர்வ வஸ்துக்களின் பிரவர்த்தி நிவர்த்தி சேஷ்டிதங்கள் பகவானுடைய ஸங்கல்பாதினமென்று உரைத்தார். சென்றுபோன ஏழாம் பாட்டில் முன்சொன்னபடி உலோக வஸ்துக்களின் தோஷங்கள் சுகதுக்கங்களில் அகப்படாதவனாய், அல்ப அஸ்திரத்துவ தோஷங்கள் ஒட்டுவது ஒருகாலத்திலு மில்லாதவனாய், ராகம் துவேஷம், ஷட்ஊர்மிகள்என்று பெயர்பெற்றமோகம் கிலேசம் மூப்பு இறப்பு பசி தாகம் முதலாய இதர தேவர்களையுங்கூடப் பீடிக்கும், அல்பகுணங்களை எக்காலத்தும் வியாபித்து விலக்ஷண ஞானனந்தாதி ஸமஸ்த கல்யாண குணங்களுடைய பரம்பரன் "உடல்மிசை உயிரென" எல்லா ஜகத்து வஸ்துக்களுக்கும் அந்தர்ஆத்ம பூதனாய் உள்ளும் புறமும் வியாபித்திருக்கின்றானென்று சொல்லி முடித்தார். இதற்கெல்லாம், யுக்திகளால் கலக்கக்கூடாத திருடமான வேதம் பிரமாணமென்று அறுதியிட்டு முடித்தார்.

இதுபோலவே வியாஸபகவான் இந்த வேதப்பிரமாணங்களால் ஈச்வரன் ஸித்திக்கிறானென்று சாரீரக சூத்திரத்தில் சித்தாந்தம் கூறியுள்ளார். இப்படி உரைத்தபிறகு ஜகத்தைப் படைக்கும் பிரமனுக்கும் ஸம்ஹரிக்கும் பரமேசுவரனுக்கும் அந்தப் பகவான் ஆத்மாவென்று இந்த 8-ம் பாட்டில் கூற என்ன ஆவசியகமென்று சங்கைவர அதற்கு, யுக்திகளாலும் சாஸ்திரத்தாலும் நிர்வாஹம் விசேஷித்து எடுத்துரைக்கிறார்.

எட்டாம் பாட்டின் பொழிப்புரை:—பிரும்மருத்திராதிகள் இப்பிரமாண்டத்தினகத்தில்உள்ளவர்களாதலால் அதை வியாபித்து வெளித்தோன்றும் ஜகத்தாய்ப் பரிணமித்துப் பிருகிருதி மஹத் அகங்காராதி சூக்ஷ்மங்களால் அதைச் சிருஷ்டித்தலாலும் அதை யுகப்பிரளயத்தில் அழிப்பதாலும் பிரம்மன் மூலமாய்த் தேவர்களுக்கு வேதத்தை உபதேசித்துக் காத்தலாலும், பரமேசுவரனைத் திருபுரத்தை எரித்து லோகங்களைக் காத்ததாலும், அந்தப் பிரம்மருத்திராதிகளுக்கும் உடல்மிசை உயிரெனக் கரந்து பகவான்தான் ஈசனாக நிற்கிறான்.

திருவாய்மொழியின் இறுதிப்பாசுரத்திலும் ஆழ்வார், "அவாவறச் சூழ் அரியை அயனை அரனை அலற்றி அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்" என்று முத்திரையிட்டது அம்மஹானுபாவன், ஹரியாகிற ஸ்ரீமந் நாராயணனையே திருவாய்மொழியில் தொண்டு வழிபாடுசெய்து பாடினதும், அப்பரம்பொருள் பிரம்மருத்திர ஆத்மாவாய் நிறைவாதலின் "அயனை அரனை"த் தாம் அலற்றினதாக எடுத்துரைப்பதும் இங்குக் கவனிக்கத்தக்கது.

பதவுரை.

சுரர் - தேவதைகளுக்கு (பிரம்மருத்திராதிகளுக்கும் கூட) அறிவு - அறிகைக்கு, அரு - அருமையாய் (முடியாததாய்) - நிலை - சுபாவத்தையுடைய, விண் முதல் முழுவதும்-பிரதிவி முதல் ஆகாயம்வரையுள்ள தத்துவங்கள் முழுதும், வான் முதலாய் - சிரேஷ்டமான காரணமாய் (எல்லாக்காரணமுமாய் என்றபடி) அவை - அந்தப் பஞ்சபூதங்களையும், உண்ட-விழுங்

கிய, பரபரன் - பாருக்குப் பரன் (அதாவது நம்மைக் காட்டிலும் உத்கிருஷ்டரான பிரம்மாதிகளுக்கும் மேலானவன்) ஒரு - ஒப்பற்ற, புரம் மூன்று - திரிபுரம் என்கிற அசுரர்களாகிய மூன்று பட்டணத்தை, எரித்து - சுட்டு (ருத்திரனாய் நின்று எரித்து) அமரர்க்கு - இந்திராதி தேவதைகளுக்கு, அறிவு - ஞானத்தை, இயந்து - விரிஞ்சன் என்கிற பிரம்மாவுக்கு ஆத்மாவாய் நின்று வேதஞானத்தைத் தேவர்களுக்கு அளித்து, அரன் அயனென - ருத்திரன் அயன் என, உலகு - வெளிப்படையாய் காண்கின்ற லோகத்தை, அழித்து - ருத்திரனாக ஸம்ஹரித்து, அமைத்து - பிரம்மாவாக உற்பத்தி செய்து, உளன் - மேல் சொன்ன பிரம்மருத்திரர்களுக்குள் அந்தராத்மாவாக இருக்கின்றான். திரிபுர சம்ஹாரத்தில் மஹா விஷ்ணு சிவதனுசாய் நின்றாரென்று மார்க்கண்டேய ரிஷி மஹா பாரதத்தில் கூறுவது நினைக்கத்தக்கது.

விரிவுரை:—சுரர் அறிவதற்கு அருமை - பிரம்மா உருத்திரர் அண்ட மத்தியில் ஜகித்தவர் - மூலப் பிருகிருதி, மஹான், அகங்காரம் என்கிற மூன்று தத்துவங்களும் அண்டத்தை வியாபித்தும் கடப்பதால் அவர்கள் அறிய சாத்தியமில்லை என்றுகருத்து. இவர்களே சில நிலையில் தாங்கள் பகவானுடைய ஆதீநமென்பதை மறக்கின்றார்கள். விஷ்ணு, தசாவதாரங்களாய் அண்டத்தினகத்தில் உத்பவிக்கவில்லையா என்றால், அந்த அவதாரங்கள் அவரது சுய இச்சைகிருதமாய் வந்தன; கர்மவசியத்தால் ஏற்பட்டதல்ல என்பது சமாதானம். பிரம்மருத்திரர்களுக்கும் உத்பவித்தது அவதாரமாகாதோ என்றால், வேதத்தில் அவர்கள் பகவத்ஆதீநம் என்று வியக்தமாய்க் கூறப்பட்டிருக்கிறதால் ஆகக்கூடாது என்று கொள்ளவேண்டும்.

தமிழ்ப் பாடம் 111.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[152-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

வெம்புயவீ மனும்வெகுண்டு மீண்டுமிவை
யெடுத்துரைப்ப மேக.மேனிப்
பைம்பொனெடுந் தனித்திகிரிப் பரந்தாமன்
கருணையுடன் பரிந்து நோக்கி
அம்புவியின் முன்பிறந்தோ ரரசுநெறி
முறையுரைத்தா லதுகே ளாமற்
றம்பியரு மறுப்பரோ தலைவவினிக்
கடுங்கோபந் தணிக வென்றான் 18.

தமையனுக்கு எதிர்பேசுதல் தகுதி அன்று என்று கண்ணன் வீமனை அமர்த்துதல்.

பதவுரை.

வெம் - கொடிய, புயம் - புயங்களையுடைய, வீமனும் - வீமசேனனும், வெகுண்டு - கோபங்கொண்டு, மீண்டும் - மறுபடியும், இவை - இவ்வார்த்தைகளை, எடுத்து உரைப்ப - எடுத்துச் சொல்லவும் (அவனை)

மேகம் - மேகம்போன்ற, மேனி - சரீரத்தையும், பைம்பொன்-பசும் பொன்னாலாகிய, நெடும் - பெரிய, தனி - ஒப்பற்ற, திகிரி - சக்ராயுதத்தையும் உடைய, பரந்தாமன் - கிருஷ்ணன், கருணையுடன் - அருளோடு, பரிந்து - இரங்கி, நோக்கி - பார்த்து,

அம் - அழகிய, புவியில் - உலகத்தில், முன்பிறந்தோர் - முதல் பிறந்த தமையன்மார், அரசு - அரசிற்குரிய, நெறிமுறை - தர்ம முறைமையை, உரைத்தால் - சொல்லும்போது, தம்பியரும் - இளையவர்களாயிருப்பவர், அது - அச்சொற்களுக்கு, கேளாமல் - இணங்காமல், மறுப்பரோ - மறுப்பது உண்டோ! (ஆகையால்)

தலைவ - தலைவனே, இனி - இனிமேல், கடும்கோபம் - (உன்) கொடிய கோபத்தை, தணிக - தணித்துக்கொள், என்றான் - என்று (கிருஷ்ணன்) கூறினான்.

விரிவுரை.—பிள்ளையையுங் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகின்ற மாயஞ் சிறிது புரிகின்றான் கண்ணன். நஞ்சுதனை மிக வருந்தினால் நன் மருந்தும் மந்திரமும் நாடவேண்டுமாகையால் எமக்கு என்ன உபாயம் கூறுகின்றாய் என வினவிய தருமனை நோக்கி, 'ஐவராம் அவனிபர்க்கு நினைவேது, என்று கேட்டவளவில் அப்பாண்டவர் கருத்தையேதான் நிறைவேற்றக் காத்துக்கொண்டிருப்பவன்போல் பாவித்தான் கண்ணன். அதன்மேல் தருமன் போரொன்று புரிதலின்றி, கைரவமும் தாமரையும் கமழ்பழனக் குருநாட்டில் அத்துரியோதனதியர்களுடன் கலந்து வாழச்சந்துபடஉரைத்தருள வேண்டவே, பூபாரம் தீர்க்கப் பிறந்த புயல்வண்ணனுக்கு இது பொருந்தாதாகையால், அவ்வாறு செய்யின், "பூதலத்தோர் ஏசாரோ, புகன்ற பெருவஞ்சினமும் பொய்த்திடாதோ, நீதியோ" என வன்மையோடுரைக்கையில் பாண்டவராம் பிள்ளைகள் கிள்ளப் பெற்றனர். ஆயின், இனித் தூதுசென்றும் அவர் இணங்கி வாரராகில் போர்புரிவென் என்று முழங்குவான்போல் துவக்கிய தருமன் ஐந்தூரிலும், அவையும் மறுத்தால் ஐந்து இல்லத்திலும், தன் குரலை ஒடுக்கிவிட்டான். பெரிதாக ஆரம்பித்துப் படிப்படியாய்ச் சென்றுதேய்ந்து இறுவதற்குத் தெலுங்கில் 'பஞ்சபாண்டவலு மஞ்சங்கால் போல முக்குரு" என இரண்டு விரலைக்காட்டிப் பின் அக்கணக்கைத் தரையிலே விரலால் ஒன்றுஎழுதி, அதையும் அழித்துவிடுகின்ற வழக்கினை ஒக்கும். பாண்டவர்கள் இன்னாரென்று தெரியாத ஒருவனைப் பஞ்சபாண்டவர்கள் எத்தனைபேர் என்று ஒரு குறும்பன் கேட்க, அவ்வறிவிலி தனக்கு யாவும் தெரிந்த பாவனையில் 'பஞ்சபாண்டவர்கள எனக்குத் தெரியாதோ' என்னும் தொனியில் துவக்கினானேனும், அவன் மனத்துளே சந்தேகம் சிறிதுண்டாக அதனைத் தெரிவித்தற்குக் கட்டிற்கால்களை உதாரணம் கூறப்புகுந்தனனாய், அதனைக்கூறி முடிப்பதற்குள் சந்தேகம் வன்மையுற, 'பஞ்ச'பாண்டவர்கள் கட்டில் கால்போல நால்வர்' என்றேனும் சொல்லத்துணியாது

மூவர் என உரைத்தனன். உரைத்ததை உரைக்குமளவில் நிச்சயம்தளர்ந்து மூன்று என்று வாயில் சொல்லிக்கொண்டே இரண்டு விரல்களைக் காட்டுங்கால், பஞ்சபாண்டவர்கள் இரண்டு பேர்கூட ஆவாரோ வென்றயிர்த்து இரண்டு என்று விரலிற் காட்டிய கணக்கையும் தரையில் ஒரே கோடு கிழித்து உணர்த்தலாயினன். கணக்கினது ஐயமோ முன்னினும் வன்மையுறக் கிழித்தவொன்றையும் அழித்துவிட்டான் என்பர். இவ்விதம், ஐந்து பாண்டவர்கள் நான்கு கால்களுடைய கட்டில் போன்றவராகி மூன்றென மொழியப்பட்டு, இருவிரல்களால் குறிக்கப்பெற்று ஒன்றேயாய் எழுதப்பெற்று இறுதியில் அதுவுமின்றிக் கணக்கழிந்துபோய சரிதையை அந்த ஆந்திரவாக்கியம் சித்திரிக்கின்றது. இவ்வழக்கு, அதிகம் செய்வதாகவேனும் தருவதாகவேனும் வாக்களித்துப் பின் வரவரக்குறைத்து ஒன்றுமின்றித் தீர்கின்ற இயல்புடைய மாந்தரைப் பரிகசித்துப் பயில்வதற்கு உதவியாவதை யாவரும் உணர்வர். அவ்வுதவிக்குத் துணைநிற்கும் அப்பாண்டவர்களில் மூத்தவன், பகைவருடன் "செய்ய வளைக்குலமும் வலம்புரியும் மிக முழங்க, வெய்யகாலன் மாதூதர் மனங்களிக்கப் பொருதெனினும்', தாயமும் அரசும் வசையிலா வகைப் பெறுவனெனக் கூவிய கட்டுரை, புனல்நாட்டின் பாதிவேண்டு, அவையில் எனில் ஐந்தூர்வேண்டு, அவையில் எனில் ஐந்து இலம்வேண்டு அவை மறுத்தால் அடுபோர் வேண்டு எனப்பூசையின் ஓசையாய்த் தேய்ந்து முடிந்தது. வெகுண்டனன் வீமன். கண்ணன் முன் போர்தூண்டிய உரைகளின்று அவன் தன்சார்பு நின்றனன் என நினைத்தனன். ஆதலின் ஊனமிலான் மானமிலாதுரைத்தற்கு என்செய்வதென்றும், அன்னானுடன் பிறந்தேனே புன்விதியேன் என்றும், இழிவுற உரைக்கத் துணிந்தனன் அவனுக்குப் பல நீதிகளைத் தருமன் எடுத்தோதவே தான் அதற்கு இணங்கினான்போல், ஆயின் 'அவ்வாறே சந்துசெய்யக் கண்ணனல்லாது என்னை அனுப்புக' என்று சொல்லப்புக்கவளவில், மடப்பாவை வரமும் தன்வரமும் வழுவாவண்ணம் அக்காரியத்தை முடிப்பதாகத் தன் வஞ்சனைப் பரிகசத்தை வெளிப்படுத்தினான். தமக்காகத் திருமால் நின்ற நிலையினது நினைவே அவனுக்கு இத்துணைத் துணிவு கொடுத்தது. உடனே அத்திருமால் அத்துணிவினைத் தணிப்பாராகி, அம்புவியில் முன்பிறந்தோர் அரசு நெறிமுறை யுரைத்தால், அது கேளாமல் தம்பியர் மறுப்பரோவென, வீமனைக்கடிந்துரைத்தார். மாமாயன் இவன் செய்கை தேர்ந்திடார் அச்சிறுவர். வீமன் வாய் இவ்விதம் அடங்கவேண்டி நேர்ந்தது கண்டிருந்தும், விசயன் வாளாவிருத்தலன்றித் தன் கருத்தையினி விளம்பலுற்றான்.

மைக்கால முகிலூர்தி வானவர்கோன்
றிருமதலை வணங்கி நின்று
முக்காலங் களுமுணரு முகுந்தனுக்கு
முதல்வனுக்கு மொழிவான் மன்னோ
வக்காலம் பொறுத்தவெலா மமையாம
லின்னமிருந் தறமே சொன்னா
லெக்காலம் பகைமுடித்துத் திரௌபதியுங்
குழன்முடிக்க விருக்கின் றாளே. 19.

தருமனது கருத்திற்குத் தான் இணங்காமையை விசயன் சொல்லத் துவக்குகின்றான்.

பதவுரை.

மைக்கால - கார்காலத்து, முகில் - மேகத்தை, ஊர்தி – வாகனமாகவுடைய, வானவர்கோன் - தேவேந்திரனது, திரு - அழகிய, மதலை - புத்திரனாகிய அர்ச்சுனன், வணங்கி நின்று-எழுந்திருந்து வணங்கி, முக்காலங்களும் - மூன்று கால நிகழ்ச்சிகளையும், உணரும் - அறிந்திருக்கின்ற, முகுந்தனுக்கும் - கண்ணபிரானுக்கும், முதல்வனுக்கும் - தன் தமையனாகிய தருமனுக்கும், மொழிவான் - பின்வருமாறு சொல்லலானான். (மன்-ஓ—அசைகள்.)

அக்காலம் - திரௌபதியைத் துகிலுரிந்த அந்தக் காலத்திலே, பொறுத்தவெலாம் - நாம் பொறுத்துக் கொண்டிருந்த தெல்லாம், அமையாமல் - போதாமல், இன்னம் - இப்பொழுதும், இருந்து - முன்னிருந்தபடியே இருந்து, அறமே சொன்னால் - (வஞ்சினமும் சேவகமும் கருதாது) தருமத்தையே சொல்லிக் கொண்டிருந்தால், எக்காலம் - எந்தக்காலத்தில் நாம், பகைமுடித்து - பகையைத் தீர்த்து......

திரௌபதியும் - திரௌபதியும், குழல் முடிக்க - தனது கூந்தலை முடித்துக்கொள்ள, இருக்கின்றாளே நெடுங்காலமாகக் காத்துக்கொண் டிருக்கின்றாளே.

விரிவுரை:—"எக்காலம் பகை முடித்து" என்று தொடர்ந்தது வாக்கிய அமைப்புப் பிறழ்ந்து, குழல் முடிக்க விருக்கின்றாளே என முடியும் இவ்வழகு கருதத்தக்கது.

எக்காலம்......முடித்து...இருக்கின்றாளே என்ச் சொற்கள் சேரவியலாமை யாவர்க்கும் புலப்படும். உற்றெழுந்த அர்ச்சுனன் உரைத்துவருங்கால் திரௌபதியின் தோற்றம், அவள் உற்ற இழுக்கோடு அவிழ்ந்தலைந்த கூந்தலால் தன் கண்முன் தோன்ற, உளம் துடித்து உரைமாறிய பெற்றியிது ஷேக்ஸ்பியரின் நாடகத்திறமையையே ஒக்கும்.

தீண்டாத கற்புடைய செழுந்திருவைத்
துகிலுரியச் செயலொன் றின்றி
நீண்டானே கரியானே நிமலாவென்
றரற்றினளாய் நின்று சோர
மாண்டார்போ லதுகண்டு மன்னவையில்
யாமிருந்த மாசு தீர
வேண்டாவோ வேண்டுவது மேம்படுநல்
லறமேயோ வேந்தர் வேந்தே. 20.

தேவராயினும் அசுரராயினும் யாவராயினும் வெல்லுகின்ற ஆற்றல் தன்னிடத்தில் உளதென்று அர்ச்சுனன் விளம்பிக்கொண்ட செய்யுளொன்று இதன்முன் விடப்பட்டுளது. இதனில் அறத்தைக் காப்பதைக்காட்டிலும் தம் மானத்திற்குண்டான மாசினைத் தீர்க்கவேண்டியதே முக்கியமெனச் சாற்றுகின்றான்.

பதவுரை.

தீண்டாத - எவராலும் தீண்டத்தகாத, கற்புஉடைய - கற்பை உடைய, செழும் - வளம் மிகுந்த, திருவை - லக்ஷ்மியை ஒத்த திரௌபதியை, துகில் உரிய - துரியோதனதியர் ஆடையைப்பற்றி நீக்கவும், செயல் ஒன்றும் இன்றி-யாதொன்றும் செய்ய ஆற்றாமல், நீண்டானே - உலகெலாம் அளக்க வளர்ந்த

வனே, கரியானே - கருநிறமுடையவனே, விமலா - மாசிலாத் தூய்மையோனே, என்று அரற்றினள் ஆய்- என்று கதறினவள் ஆகினவளாய், நின்று சோர - சோர்வடைய, அதுகண்டு - அதைப்பார்த்தும், மாண்டார்போல் - செத்தவர்களைப்போல, மன் அவையில்- அரசர் சபையில், யாம் இருந்த - நாமெல்லாம் சும்மாயிருந்த, மாசு - குற்றமும் பழியும்,தீரவேண்டாவோ- நாம் தீர்த்துக்கொள்ள வேண்டுவதில்லையோ.

வேந்தர் வேந்தே - அரசனுக்கு அரசனே, வேண்டுவது - நமக்கு இப்பொழுது வேண்டியிருப்பது, மேம்படு-மிகச்சிறந்த, நல் அறமேயோ - நல்ல அறமே தானோ (கூறுவாய்).

விரிவுரை:—வீமனைப்போல் விசயனும் தாமுற்ற பரிபவத்தையே பெரிதும் கவல்கின்றான். வெல்வதற்கேற்ற ஆற்றலுமுளது; வென்று தீர்க்கவேண்டிய பழியும் உளது. எனின், எதற்கென்று இத்தருமன் இன்னுந் தாழ்கின்றான் என்பது அவன் தம்பியர்க்கு விளங்கவில்லை. வெல்வதற்குத் திறமை இல்லாத போதன்றோ மெல்லமெல்லத் தருமங்கள் பார்க்க வேண்டும் என்று கருதிய அர்ச்சுனன் வீமனைப்போல் தனது ஆற்றலைத்தெரிவித்து, "இனி மாசுதீரும்வகை தேடவேண்டுமே யன்றி நல்லறம் ஒன்றும் வேண்டப் படுவதில்லை என்று சாற்றினான்.

இலக்கணம்.

நிலைமொழியிறுதியில் உயிரும் வருமொழி முதலில் வல்லினமும் வரப் புணர்வதெங்ஙனம் எனும் விதிகளை இனிக் கற்போம். இதனோடு யகர ரகர ழகர மெய்யை ஈற்றிலுடைய நிலைமொழிகளோடு வருமொழிமுதல் வல்லினம் புணர்வதற்குரிய விதிகளையும் சேர்த்துக்கொள்ளலாம். ஏனெனில், உயிரீறாயிருப்பினும், ய் ர் ழ் என்ற மெய்யெழுத்துக்களில் ஒன்று ஈறாயிருப்பினும் விதிகள் வேறுபடுவதில்லை.

காய் சேய் செய் பேய் பெய் பாய் நாய் வாய் மெய் பொய், என்பனபோல் ய் என்னும் மெய் எழுத்தை யீற்றிலுள்ள சொற்களும்; வார் தார் பார் பகர் நகர் புகர் நிகர் துவர் பயிர், என்பனபோல் ர் என்னும் மெய்யெழுத்தை யீற்றிலுள்ள சொற்களும்; ஊழ் கூழ் வாழ் போழ் புகழ் பறழ் கமழ் அகழ் தமிழ் என்பனபோல் ழ் என்னும் மெய்யெழுத்தை ஈற்றிலுடைய சொற்களும் தமிழில் இருக்கின்றன. வருமொழி முதல் வல்லினத்தோடு நிலைமொழியிறுதி உயிர் எவ்வாறு புணருமோ அவ்வாறே இந்த ய் ர் ழ் என்னும் மெய்களும் நிலைமொழி யீறாயிருக்கும்போது புணர்கின்றன. ஆகையால் இவை இரண்டு வகுப்புக்களையும் ஒன்றாய் எடுத்துக்கொள்வோம் இதுவுமன்றி, நிலைமொழிஈறு குற்றியலுகரமாயிருப்பினும்,சிற்சிலசிறப்பு விதிகளால் வேறுபடுவதுதவிர பெரும்பான்மை, அதுவும் இவ்விதிகளுக்குள் அடங்குமாதலால்,அக்குற்றியலுகர ஈற்றையும் இதனோடு சேர்த்துக்கொள்வோம். நிலைமொழியிறுதியில் உயிரேனும், யகர ரகர ழகர மெய்களேனும் நிற்க வருமொழி முதலில் க ச த ப என்னும் வல்லின எழுத்துக்களில் ஏதேனும் ஒன்று வருமாயின் (வல்லினத்தைச்சேர்ந்த ட, ற என்னும் மற்ற இரண்டு எழுத்துக்களும் தமிழில் மொழிமுதல் வரா)எந்தவல்லினம் வந்துளதோ அதேவல்லினமெய் சிலபோது மிகுந்தும், சிலபோது மிகாமலும் புணரும் என்பது பொதுவிதி. இப்பொழுதுதான் மிகும் இப்பொழுதுமிகாது என்று விதிகளுக்குள் சிறப்பாக வரையறுத்துச் சொல்லிவிடலாமாயினும் சிறுபான்மை இவ்விதிகளுக்குள் அடங்காமற் சில வழங்கப் பெறுவதும் உண்டு. அவைகளை ஆன்றோர் வழக்கைக்கொண்டுதான் தெரிந்து கொள்ளவேண்டும். எனினும் இவ்விதிகளைக் கூடியவரையில் ஒரொழுங்குபடுத்தி இங்கு எழுதுவோம். தமிழ் எழுதுவதில் நேர்கின்ற பிழைகளில் அதிகம் வல்லினம் மிகவேண்டிய இடத்தில் மிகாது விடுத்தலும், மிகக்கூடாத இடத்தில் மிகவைப்பதும் போன்றவைகளே ஆகின்றன. ஆகையால் இவ்விதிகளை நன்கு கற்றல் நலம்.

வல்லின மெய் மிகுவதும் மிகாததும் பெரும்பான்மை நிலைமொழியும் வருமொழியும் சேர்ந்து ஆகின்ற தொடரைப் பொருந்தியிருக்கும். ஆகையால் ஒவ்வொரு தொடராக எடுத்துக்கொண்டு சொல்லிவருவோம்:—

A எழுவாய்த் தொடர்

பூனை சிறியது, நகர் பெரிது, ஊழ்கொடிது, பொய் தீது, குருதி சிந்தியது, பாம்பு கடிக்கும், ஒருத்தி சொன்னாள், என்பனபோன்றவை எழுவாய்த்தொடருக்கு உதாரணமாகும். இதனில் நிலைமொழி எப்பொழுதும் முதல்வேற்றுமையி லிருக்கவேண்டும்.

போதுவிதி:—உயிர் அல்லது ய் ர் ழ் என்ற மெய்களை ஈற்றிலுள்ள நிலைமொழி, முதல்வேற்றுமைச் சொல்லாயின் அதனோடு புணர்கின்ற வருமொழி முதல் வல்லினமெய் மிகாது. உதாரணம்:—

மதி + தவழ்ந்தது = மதி தவழ்ந்தது.
குதிரை + கனைக்கும் = குதிரை கனைக்கும்
கதவு + திறந்தது = கதவு திறந்தது
கிளி + கூவியது = கிளி கூவியது
நாய் + செத்தது = நாய் செத்தது
தேர் + பெரிது = தேர் பெரிது
புகழ் + பரவியது = புகழ் பரவியது.

குறிப்பு:—ஒருத்தி + சொன்னாள், என்பது எழுவாய்த்தொடராகையால் வலிமிகாமல்,ஒருத்தி சொன்னாள் என்றே புணரும்.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனு மாய—கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார் போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தர கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு)

மானேஜர்:—"கலா நிலயம்", 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன் கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும்,பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுத்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த
ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

189093

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமா யிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்துகொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—

KALANILAYAM,

11, VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஓயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப்படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

தனவைசிய கல்விக்கழகம்:—மேற்படி கல்விக் கழகத்தார் எமக்கு அனுப்பிய ஆண்டு அறிக்கையின்சுருக்கம் வருமாறு.—பர்மா தனவைசிய இளைஞர் சங்கத்தாரின் முயற்சியால் தனவைசியச்சிறுவர் கல்விக்காக 1928-ம் ஆண்டு ஒரு கலாசாலை நிறுவப்பெற்றது. இக்கல்விச்சாலையின் வளர்ச்சியை நோக்கிவந்த தனவைசியப் பெரியோர் பலர் முயன்று 'நாட்டுக்கோட்டையார் கல்விக் கழகம்' என்ற ஒரு டிரஸ்டு சபையை நிறுவினர். இப்பொழுது இக்கலாசாலை மேற்படி டிரஸ்டு சபையின் கீழிருக்கின்றது. கெமண்டையனில் நல்ல வசதியான விடத்தில் இக்கலாசாலை இப்பொழுது அமைக்கப்பெற்றுளது.

இங்கு அனுஷ்டிக்கப்படும் கல்விநிலய முறை வருமாறு:—

காலை 5-மணிக்கு மணி அடித்தவுடன் மாணவர்கள் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு 1½-மணிநேரம் தேகப்பயிற்சி செய்வர். பின்னர் ஸ்நானம் செய்து கடவுள் வழிபாடுகளை முடித்துக்கொண்டு காலைச் சிற்றுண்டிக்குச் செல்வர். 8-30-க்குப் பள்ளிக்கூடம் துவக்கப்பெறும். மாலை நாலுக்குமேல் மாணவர் விளையாட விடப்படுவர். மாலை 7 முதல் 8-வரை சில் மாணவர்களுக்குச் சங்கீதம் கற்பிக்கப்படும்.

இப்பொழுது முதல்வகுப்பிலிருந்து 7-வகுப்புகள் வரை கற்பிக்கின்றனர். வயித்திய வசதிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இரங்கூன் பிரபல வயித்தியரான டாக்டர் M. T. சாரியார் தினந்தோறும் பள்ளிக்குவந்து மாணவர் தேக நலத்தைக் கவனித்துச் செல்லுகின்றார்

பரிசைஷயில் தேறின மாணவர்களுக்குப் பரிசளிப்பதற்காக 1930 ஜனவரி 25ந்தேதி ஸ்ரீமான் S Rm M. A. தேனப்பசெட்டியாரின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. பரிசைஷயில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெகுமதி அளிக்கப்பட்டது.

இப்பள்ளிக்கூட நடைமுறையை ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார், B. E. T. பள்ளித்தலைமை உபாத்தியாயர், பர்மாத் தமிழ்பள்ளிக்கூட மேற்பார்வை அதிகாரி முதலிய பலர் வந்து பார்வையிட்டு இங்குக் கையாளப்பெறும் முறைகள் புகழ்ச்சிக்குரியனவென்று அபிப்பிராயங் கூறியுள்ளார்கள்.

சென்ற ஆண்டு மார்ச்சு மாதம் காந்தி அடிகள் இப்பள்ளியைப் பார்வையிட்டார். இக்கலாசாலையார் அவர்களுக்கு வரவேற்பளித்தனர். நவம்பர் மாதம் ராஜா. ஸர். அண்ணாமலை செட்டியாரவர்களையும் வரவேற்று உபசரித்தனர்.

* * *

ஓசைநலக் குறை:—"தமிழ் நெடுங் கணக்கில் வல்லெழுத்துக்கள் சில மெல்லோசை பெற்று வழங்குவதாகவும், அதனால் அது குறைபாடுள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் சிலர் சொல்லுகின்றனர். இஞ்சி தெங்கு, பந்து, வண்டு ஆகிய மொழிகளில் உள்ள வல்லெழுத்துக்கள் மெல்லோசை பெற்று ஒலிப்பதை அவர்கள் உதாரணமாகவும் காட்டுகின்றனர். அந்தந்த ஓசைகளைக் குறிக்கத் தனித்தனி எழுத்துக்கள் இருக்கவேண்டுமென்றும் அது இல்லாதது ஒரு குறையென்றும் அவர்கள் கருதுகின்றனர். ஆனால் மேற்சொன்ன மொழிகளில் உள்ள வல்லெழுத்துக்கள் தனித்தில்லாமல் மற்றும் சில மெல்லெழுத்துக்களோடு சேர்ந்திருக்குஞ் சார்பினால் ஓசை மாறுகின்றன. ஆகவே வல்லெழுத்துக்களுக்கு இங்கு ஏற்படும் ஒலி செயற்கைஒலியே யாகும்" என்று தமிழறிஞர் வேங்கடசாமி நாட்டார் கூறுகின்றார்.

* * *

யாதவமித்ரன்:—இப்பெயர் கொண்ட மாதவெளியீடு வரப்பெற்றோம். மதுரைப் புத்தகவியாபாரி ஸ்ரீ கோபாலகிருஷ்ணகோனாரால் இது மதுரையில் பிரசுரிக்கப்பெறுகின்றது. கல்விவளர்ச்சி, வியாபாரவளர்ச்சி, சமுகமுன்னேற்றம், முதலிய துறைகளில் இப்பத்திரிகை முயன்றுவருமென்றும் ஆயர்குலத்தவர் முன்னேற்றம் சிறப்பாய்க் கவனிக்கப்பெறுமென்றும், தலையங்களினின்றும், வியாஸங்களினின்றும் தெரிகின்றது. சந்தா விபரத்திற்கு, வேண்டுவோர் மானேஜர், 'யாதவமித்ரன்' வடக்குச் சித்ரவீதி, மதுரை என்ற விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

"ப்ரேமவல்லி"
அல்லது
பயங்கர ரகசியம்
By
Mrs. D. N. Sundaram

இது ஓர் சிறந்த துப்பறியும் நாவல்.

துப்பறியும் விஷயத்தில் மிகவும் சிறந்ததாகித் துப்பறிபவள் மிக்க புத்தி சாதுர்யத்துடன் பல வேலைகள் செய்துவருவது, மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது. இது படிக்கப்படிக்க மிக்க இன்பத்தைத் தரும். இன்னும் என்னவருமோ எப்படியாகுமோ வென்று படிப்போரின் மனத்தைக் கவரும் தன்மையுடையது. விலை ரூபா 0 14 0

இப்புத்தகம் கிடைக்கும் இடம்.
Mrs. D. N. SUNADARAM.
16. வடகூர் செல்வவிநாயகர்கோவில் தெரு,
மைலாப்பூர், சென்னை.

பாரதி

தேசிய மாதத் தமிழ்ப் பத்திரிகை
ஆசிரியர்:—R நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள் தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்கள் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது.

உள்நாடு சந்தா	ரூபா	2 0 0
வெளிநாடு "	"	2 8 0
தனிப்பிரதி விலை	அணா	0 4 0

விலாசம் :—'பாரதி' காரியாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

KALANILAYAM. REG. NO. M. 2324.

OUR OWN PUBLICATIONS

THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614

by THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire'. Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanagara met its end on the field of Talikota, in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES

by K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905

by POF. BENOY KUMAR SARKAR, M.A. **Rs. 4**

ECONOMIC DEVELOPMENT :

Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR. Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8.**

LIFE OF BARRISTER SAVARKAR

by CHITRA GUPTA. The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1-8**

HINDU-PAD-PADASHAHI :

or a Critical Review of the Hindu Empire of Maharashtra *by* VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR, M.A., Ph. D., Dacca. **Rs. 3**

ENGLAND'S EDUCATIONAL POLICY IN INDIA

by V. V. OAK B.A., S. T. C. Pp. 1 to 24x168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 Years in which Mr V. V. Oak has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

LOK. TILAK'S GITHA RAHASYA or THE PHILOSOPHY OF ACTION

by MANGALVEDKAR, *3rd revised edn.* **Rs. 2**

DIALOGUE DIVINE AND DRAMATIC

by GITANANDA BRAHMACHARI **Re. 1**

1.	கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம். ஆ மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T.	... 0 2 6
2.	கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம்	... 0 3 0
3.	கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம்	... 0 4 0
4.	கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம்	... 0 4 6
5.	கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம்	... 0 6 0
6.	ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார்	... 0 5 0
7.	சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர்	... 0 5 0
8.	கம்பர் அல்லது கவியரசு - ஆ. நா. கன்னையா	... 0 5 0
9.	தமிழ்ச் சிற்றிலக்கண வினவிடை கா. ரா. கோவிந்தராஜ முதலியார்	0 4 0
10.	சிறுவர் இந்து தேச சரித்திரம் வி. ஜயராம ஐயர்	... 0 5 0
11.	லிவிக்ஸ் துரைத்தனவிளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S சுப்பிர மணிய ஐயர்	... 0 5 0
12.	ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது	... 0 6 0
13.	கோபால் வாய்ப்பாடு	... 0 1 6
14.	சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா	... 0 12 0
15.	புத்திமானே பலவான் ஏ. பாசுராமையர்	... 0 10 0
16.	கிருஷ்ணதேவராயர் - கே. பி சேஷாத்திரி ஐயங்கார்	... 0 8 0
17.	பகீரதன், ஆ. நா. கன்னையா	... 0 6 0
18.	பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால பிள்ளை	... 0 6 0
19.	இலங்கேசன்-S. சீனிவாசையர்	... 0 6 0
20.	**English Selection for Higher Forms.** illustrated Revised Edition	**Re 1.**
21.	**TheNew Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed.	**As. 3.**
22.	Book II ,,	**As. 4.**
23.	Book III ,,	**As. 5.**
24.	**Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B. A., L. T.	**As. 3.**
25	**Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A., L. T.	**As. 3.**
26.	**Chandrahasa** Revised by Prof. J. C. Rollo. M. A.	**As. 6**
27.	**The Clay Cart** (In the press)	**As. 6.**

(V. P. Charges, Extra of the Prices.)

B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., [illegible]